வழக்கு விசாரணை

The Trial

64-04-19



உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

வழக்கு விசாரணை

இந்தச் செய்தியானது ஏழாம் தூதன் (வெளி. 10:6) சகோதரன் வில்லியம் மரியன் பிரன்ஹாம் அவர்களால் 1964-ம் வருடம், ஏப்ரல் மாதம், 19-ம் தேதி, அமெரிக்கா, டெம்பா, ஃபுளோரிடாவில் உள்ள மெக்கே அரங்கத்தில் பிரசங்கிக்கப்பட்டது. இப்புத்தகம் முழுமை யாக அச்சிடப்பட்டு, ***Word of Life Ministry*** மூலமாக இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது.

வெளியிடப்பட்டது: ஆகஸ்ட் 2026

Word Of Life Ministry

Bro. Peniel Ebi

5/337, Durga Garden,

Nagama Naicken Palayam,

Coimbatore-641016

Phone: 9047268278 /9487972418

Web: www.wordoflife.in

வழக்கு விசாரணை

The Trial

64-04-19



மாற்கு 16-ஆம் அதிகாரம் 9-வது வசனத்தி லிருந்து நான் வாசிக்க விரும்புகிறேன், அப்படிப்பட்ட ஒரு மகிமையான பொருள், அது உயிர்த்தெழுதலைக் குறிக்கிறது.

வாரத்தின் முதலாம்நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்தபின்பு, மகதலேனா மரியாளுக்கு முதல்முதல் தரிசனமானார்.

அவளிடத்திலிருந்து அவர் ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்தார். அவள் புறப்பட்டு, அவரோடேகூட இருந்தவர்கள் துக்கப்பட்டு அழுதுகொண்டிருக்கையில், அவர்களிடத்தில் போய், அந்தச் செய்தியை அறிவித்தாள்.

அவர் உயிரோடிருக்கிறாரென்றும் அவளுக்குக் காணப் பட்டார் என்றும் அவர்கள் கேட்டபொழுது நம்பவில்லை.

அதன்பின்பு அவர்களில் இரண்டு பேர் ஒரு கிராமத்துக்கு நடந்துபோகிற பொழுது அவர்களுக்கு மறுரூபமாய்த் தரிசனமானார்.

அவர்களும் போய், அதை மற்றவர்களுக்கு அறிவித்தார்கள்; அவர்களையும் அவர்கள் நம்பவில்லை.

அதன்பின்பு பதினொருவரும் போஜனபந்தியிலிருக் கையில் அவர்களுக்கு அவர் தரிசனமாகி, உயிர்த்தெழுந் திருந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமற்போன தினிமித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தைக்குறித்தும் இருதய கடினத்தைக்குறித்தும் அவர்களைக் கடிந்து கொண்டார்.

பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்,

விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்.

விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்;

சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார்.

இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார்.

அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்.

2. நாம் ஜெபிப்போம். கர்த்தராகிய இயேசுவே, இப்பொழுது நாங்கள் பிதாவின் சிங்காசனத்தை அணுகு கின்ற இந்த வேளையில் கூறுகிறோம், அது உம்முடைய வார்த்தையாய் இருக்கிறது என்று உமது நாமத்தில் விசுவாசிக்கிறோம். நீர் பரலோகத்தில் ஏறிச் செல்வதற்கு முன்பாக உமது உதடுகளிலிருந்து பிறந்த இந்த கடைசி வார்த்தைகள் இவைகள் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். மேலும், இந்தப் பிற்பகலில் வியாதியாயிருப்பவர்கள் நிமித்தம் நீர் எங்கள் இருதயத்திற்கு ஆசிர்வாதத்தை

தருமாறு நாங்கள் கேட்கிறோம். கடந்த இரவில் ஒரு பெரிய எண்ணிக்கையிலான ஜனங்களை உம்முடைய சிங்காசனத் தண்டை நீர் அழைத்ததற்காக உமக்கு நன்றி செலுத்து கிறோம். மேலும் புருஷர்களும், ஸ்திரிகளும், தகப்பன் மார்களும், பிள்ளைகளும், தாய்மார்களும் மிகப்பெரிய கூட்டமாக அந்த வரிசையில் கடந்து வந்து ஜெப அறைக் குள்ளாக பிரவேசித்ததை கண்டோம். பிதாவே, அதற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். மேலும் உம்முடைய ராஜ்யத்தின் ஐசுவரியத்தை நீர் அவர்களுக்குத் தர வேண்டுமென்று இப்பொழுது ஜெபிக்கிறோம். இந்த பிற்பகலில் தேவனுடைய வார்த்தையை எங்களுக்கு உண்மையானதாக மாற்றுவதற்கு தேவையான விசுவாசம் எங்கள் மத்தியில் காணப்படுவதாக. பிதாவே, அதைச் செய்யக் கூடியவர் நீர் ஒருவர் மாத்திரமே, ஆகவே இதை இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

நீங்கள் அமரலாம்.

3. இப்போது இந்த மதிய வேளையில் நான் எடுத்து கொள்ள விரும்புகிற பொருள் இதுதான், அது சற்று விநோதமாக இருக்கிறது. நான் அதை எடுக்க விரும்புகிற காரணம் நேற்று காலை உணவின்போது, நான் மிகச் சிறந்த மனிதர்களில் ஒருவரை சந்தித்தேன், அவர் இப்போது எனக்குப் பின்னால் அமர்ந்திருக்கிறார், அவர் ஒரு வழக்கறிஞர். நாங்கள் ஒரு வழக்கு விசாரணையைப் பற்றி பேசிக் கொண்டிருந்தோம். அது ஏறக்குறைய நம்முடைய கர்த்தருக்குக் கொடுக்கப்பட்ட ஒரு போலி விசாரணை போன்றதாக இருந்தது. மேலும் அந்த மனிதன் இங்கே நின்று அதை தேசத்து நீதிமன்றங்களுடன் ஒப்பிட்டுப் பேசுவதற்கு ஒரு சிறந்த மனிதனாக இருப்பார் என்று நான் நிச்சயமாக விசுவாசிக்கிறேன். ஏனென்றால், நான் அவரைச் சந்தித்ததிலிருந்து அவரைப் பற்றி பேசிக்கொண்டே இருக் கிறேன். அவர் ஒரு அற்புதமான வழக்கறிஞர் என்று

அவர்கள் என்னிடம் சொல்கிறார்கள். அதனால் அவர் அவருக்கு (இயேசுவுக்கு) ஒரு நியாயமான விசாரணையை வழங்குவார் என்று எனக்குத் தெரியும். இயேசு ஒரு போதும் ஒரு சரியான விசாரணையை பெறவில்லை என்பதால்... மேலும் அவர் வார்த்தையாக இருக்கிறார். அதை நாம் அனைவரும் ஒத்துக் கொள்கிறோம். அவர் வார்த்தையாக இருக்கிறார், எனவே நான் அவருடைய வார்த்தையை வாசித்திருக்கிறேன். ஆகவே இன்று பிற்பகலில் அந்த வார்த்தையையே விசாரணைக்கு உட்படுத்தப் போகிறோம்.

இந்த வார்த்தை விசாரணைக்கு வந்திருக்கிறது.

4. வழக்கு என்னவென்றால், தேவனுடைய வார்த்தை யின் வாக்குத்தத்தமும் அதற்கு எதிராக உலகமும். குற்றச் சாட்டுக்கான காரணம் ஒரு வாக்குறுதியை மீறியதாகும். மேலும் அரசு தரப்பு வழக்கறிஞர் எப்போதும் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறார் என்று நான் நினைக்கிறேன். அது சரியே. மேலும் சாத்தான்தான் அந்த அரசு தரப்பு வழக்கறிஞர், இந்த விசாரணையில் அவன் உலகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறான். பிரதிவாதி தேவனாக இருக்கிறார். மேலும் பிரதிவாதியின் சாட்சி பரிசுத்த ஆவியானவர். எனவே நான் சபையை, சபை யாரை நடுவர் குழுவாகவும், நீதிபதியாகவும், அமர்த்த விரும்புகிறேன். இப்போது நாம் விசாரணையை கேட்போம். இந்த காரியங்களை பகிரங்கமாக வெளிப்படுத்தும்போது, நாம் எங்கே அமர்ந்திருக்கிறோம் என்றும் காணலாம்.

5. இப்போது மறந்துவிடாதீர்கள். நாம் இங்கு காண்பது என்னவென்றால், இந்த வழக்கு விசாரணைக்குக் காரணம், தேவனுடைய வார்த்தையும் உலகமும் எதிரெதிர் அணியில் இருப்பதுதான். இந்த குற்றச்சாட்டுக்கான காரணம் ஒரு வாக்குறுதியை மீறியது, அதாவது, தேவன் ஒரு வாக்குறுதி செய்தார் அது உண்மையல்ல என்று உலகம் குற்றம்

சாட்டுகிறது. அது ஒரு வாக்குறுதியை மீறுவது, அவர் தம்முடைய வாக்குறுதியை காப்பாற்றுவதில்லை என்பதே குற்றச்சாட்டு. மேலும் இந்த வழக்கில் உலகத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் அரசு தரப்பு வழக்கறிஞர் சாத்தானாக இருக்கிறான். மேலும், பிரதிவாதி தேவனே. பிரதிவாதி தரப்பின் சாட்சி பரிசுத்த ஆவியானவர்.

இப்போது நாம் நீதிமன்றத்தை ஒழுங்குக்காக அழைக்கிறோம்.

6. இப்போது அரசு தரப்பு வழக்கறிஞர் தனது முதல் சாட்சியை சாட்சி கூண்டிற்கு அழைத்து சத்தியப்பிரமாணம் செய்யவைக்கிறார். மேலும் இன்று பிற்பகல் இந்த விசாரணையில் அவர் பயன்படுத்த விரும்பும் மூன்று சாட்சிகள் இருக்கிறார்கள். அந்த சாட்சிகள் திரு. அவிசுவாசி, அடுத்தவர் திரு. சந்தேகவாதி, அடுத்தவர் திரு. பொறுமையற்றவர். இப்போது இவர்கள் தான் அழைக்கப் படப் போகும் சாட்சிகள். தேவன் தம்முடைய வார்த்தையை காத்துக்கொள்ளுகிறதில்லை என்றும் அவருடைய வார்த்தை உண்மையில்லை என்று கூறும் இவர்கள்தான் இந்த வழக்குக்கு எதிரான சாட்சிகள்.

7. இப்பொழுது விசாரணையை தொடங்குவதற்கு முன்பு தேவனுடைய வார்த்தை உண்மையல்ல என்று கூற பெரும்பாலானோர் உலகில் இப்படி முயற்சிக்கிறதை நாம் காணலாம். உதாரணமாக நான் இப்பொழுதுதான் ஸ்கோஃபீல்டின் அடிக்குறிப்புகளை படித்துக்கொண்டிருந் தேன். அப்போது ஒரு முறை எனக்கு சொல்லப்பட்ட ஒரு சம்பவம் பற்றி நான் யோசித்துக் கொண்டிருந்தேன், ஆனால் நான் அதை இந்தக் கூட்டத்தில் எப்போதாவது மேற்கோள் காட்டியிருக்கிறேனா என்று எனக்கு தெரிய வில்லை. ஒரு ஸ்திரி ஒரு நல்ல வாலிப மகனை பெற்றிருந்தாள். அவனை ஒரு ஊழியக்காரனாக்க விரும்பி னாள். அவள் மிக வறுமையில் இருந்தாள். மேலும் தன்

மகனுக்கு எல்லா விதமான நல்ல கல்வியையும் ஏற்ற பயிற்சியையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்பினாள். (அதை எந்தத் தாயும் விரும்புவாள், அவன் அப்படி அழைக்கப்பட்டிருந்தால்), அதுவே அவனுக்கு கிடைக்கக்கூடிய மிகச்சிறந்த பயிற்சியாக இருக்கும். எனவே அவனை அவனுக்கு தெரிந்த மிகச்சிறந்த மதப்பயிற்சி பள்ளிக்கு அனுப்பினாள்.

8. நல்லது அவன் சுமார் ஒரு வருடம் அங்கே இருந் தான். ஒரு நாள் அவனுடைய தாயார் மிகவும் கடுமையாக நோய்வாய்பட்டாள், அவள் மிகவும் மோசமான நிலையில் இருந்தாள். மேலும் அவர்கள் தொடர்ந்து அவனுக்கு தந்தி அனுப்பிக் கொண்டே இருந்தனர். அவள் தனியாகவே வாழ்ந்து வந்தாள். அவன் வீட்டிற்கு வர வேண்டியிருந்தது, அவளுக்கு மிகவும் கடுமையான சளி ஏற்பட்டு, அது இரட்டை நிமோனியாவாக மாறி நுரையீரல்களில் சளி கட்டிவிட்டது. மேலும் அவள் உயிர் பிழைக்க முடியாது என்று தோன்றியது. அவளுடைய இருதயமும் மிகவும் பலவீனமாகிவிட்டது. அந்த உண்மையுள்ள மருத்துவர் அவளுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக தனக்குத் தெரிந்த அனைத்தையும் செய்து கொண்டிருந்தார். ஆனால் அவள் நிலை தொடர்ந்து மோசமடைந்தது. இறுதியில் அந்த மருத்துவர் அந்த இளைஞனுக்கு ஒரு தந்தி அனுப்பி "உடனே புறப்பட ஆயத்தமாகுங்கள், உங்கள் விமான இருக்கையை முன்பதிவு செய்யுங்கள் ஏனென்றால், நீங்கள் எந்த நேரத்திலும் உங்கள் தாயிடம் வர வேண்டிய நிலை ஏற்படலாம். அவள் மரணத்திற்கு மிக அருகில் இருப்பது போல் தெரிகிறது" என்று எழுதினார். மேலும் அந்தப் இளைஞன் மிகவும் கலங்கிப்போய், தனது உடைகளைத் தயார்செய்து விமானத்தில் புறப்படுவதற்கு தயாரானான். அப்போது அவனுடைய தாயிடமிருந்து நேரடியாக ஒரு தந்தி வந்தது. "மகனே நீ வர வேண்டாம், நான் முழுவதும் குணமாகி விட்டேன்" என்று.

9. சுமார் ஒரு வருடம் கழித்து, அல்லது ஆறு மாதங்கள் பிறகு என்று நான் நம்புகிறேன். அவன் தன் வீட்டிற்கு திரும்பி வந்தான். மேலும் அவன் தன் தாயாரை வாழ்த்திய பின்பு அவர்கள் ஒன்றாக பேசிக் கொண்டிருந் தனர். அவன், "அம்மா இன்னும் என் மனதில் ஒரு கேள்வி இருக்கிறது" என்றான், "நீங்கள் மிகவும் நோய்வாய் பட்டிருந்தபோது" என்று சொல்லி, "அதன் பிறகு நீங்கள் ஒருபோதும் எனக்கு எழுதி விவரங்களைச் சொல்ல வில்லை, நீங்கள் குணமடைந்து விட்டீர்கள் என்று மட்டும் எழுதினீர்கள். அது எப்படி நடந்தது என்ற விவரங்களை நீங்கள் ஒருபோதும் எனக்குச் சொல்லவே இல்லை" என்றான்.

10. அவள் சொன்னாள், "மகனே இந்த தெருவின் கீழே இருக்கும் சரியாக அந்த பழைய மளிகை கடைக்கு அருகில் இருந்த இடம்? "

"ஆம்"

11. "அந்த சிறிய கட்டிடத்தில் ஒரு கூட்டம் ஜனங்கள் ஆராதிக்கிறார்கள். "

"ஆம்" என்று சொல்லி, "அவர்கள் யார் என்று எனக்கு நினைவிருக்கிறது, அவர்கள் பெந்தெகொஸ்தே ஜனங்கள்" என்றான்.

12. அவள் "ஆம், அது சரிதான்" என்றாள். நான் மிகவும் மோசமாக இருந்தபோது, ஒரு நல்ல ஸ்திரி இங்கே என்னிடம் வந்தாள். மேலும் அவள் "சகோதரியே நாங்கள் அங்கே ஜெபக்கூட்டத்தில் இருந்தோம், உங்களுக்கு மிகவும் சுகமில்லை என்று அறிந்து கொண்டோம், மேலும் உங்களுக்கு ஒரு மகன் இருந்தான் என்றும், அவன் ஒரு ஊழியக்காரன் ஆவதற்காக வெளிநாட்டில் உள்ள வேதாகமப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிறான் என்றும், நாங்கள் ஜெபித்துக் கொண்டிருந்த பொழுது

நாங்கள் வந்து உங்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்றும் கர்த்தர் எங்களுக்கு வெளிப்படுத்தினார்" என்று கூறினாள். மேலும் நாங்கள் உங்களுக்காக ஜெபித்தால் உங்களுக்கு சுகமாகிவிடும் என்றும் கூறினாள். எங்களுடைய போதகர் வந்து உங்களுக்காக ஜெபிப்பதில் உங்களுக்கு ஏதாவது ஆட்சேபனை உண்டா" என்று கேட்டாள். நான், "ஏன், அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை ஸ்திரியே" என்று சொன்னேன். "நான் அதற்காக சந்தோஷப்படுவேன்" என்று கூறினேன். "மருத்துவரும் பரவாயில்லை அவர்கள் செய்யட்டும் என்று கூறினார்? ஆகவே அந்த போதகர் இங்கே வந்து மாற்கு 16 ஆம் அதிகாரத்திலிருந்து சில வேத வசனங்களை வாசித்தார். மேலும் அவர் இதைத்தான் வேதம் கூறுகிறது என்று சொல்லி, அவர் தன் மீது அவர் கைகளை வைத்து ஜெபித்து விட்டு அவர் கடந்து சென்று விட்டார். நானும் சுகமாகி விட்டேன்" என்று கூறினாள்.

"ஓ" "அம்மா" என்று அவன் சொன்னான்!

அவள், "மகனே, அது அருமையாக இல்லையா, அதைக் குறித்து சிந்தித்துப் பார்!" என்று கூறினாள்.

13. அவன் சொன்னான், "ஓ அம்மா, அதற்கும் நீங்கள் குணமடைவதற்கும் சம்பந்தமில்லை, ஒருவேளை மருத்து வர் உங்களுக்கு ஏற்கனவே கொடுத்திருந்த மருந்துகளில் ஏதோ ஒன்று அப்போது தான் வேலை செய்ய தொடங்கி யிருக்கலாம்" என்றான்.

14. மேலும் அவள், "ஓ இல்லை மகனே, மருத்துவர் இரண்டு நாட்களுக்கு முன்பே எனக்கு மருந்து கொடுப் பதை நிறுத்திவிட்டார், அவரால் எதுவும் செய்ய முடிய வில்லை என்று சொன்னார், அவர் எனக்கு ஆக்சிஜன் மட்டும் கொடுத்து, அதற்கு மேல் அவரால் எதுவும் செய்யமுடியாது என்றார். நான் தொடர்ந்து மோசம் அடைந்து கொண்டே இருந்தேன்" என்று சொன்னாள்.

15. அதற்கு அவன், "ஓ அம்மா அது அப்படியல்ல பாருங்கள், அந்த ஜனங்கள் எல்லாம் படிப்பறிவு இல்லாத வர்கள், அவர்களுக்கு உண்மையில் இதெல்லாம் ஒன்றும் புரியாது. அவர்கள் வெறுமனே வேதத்தை வாசிக்கிறார்கள் அவ்வளவுதான்." என்று சொன்னான், புரிகிறதா?

அதற்கு அவள், "அது சரி மகனே, நாம் வேதாகமத்தை விசுவாசிக்க வேண்டாமா?" என்று கேட்டாள்.

16. அதற்கு அவன், "ஓ நிச்சயமாக, அம்மா நாம் அதை விசுவாசிக்கத்தான் வேண்டும்." ஆனால் என்று சொல்லி, "உங்களுக்குத் தெரியுமா? எங்கள் பள்ளியில் சொன்னார்கள்" என்று சொல்லி மாற்கு 16 -ஆம் அதிகாரம் 9-வது வசனத்திலிருந்து அவன் வாசித்து காண்பித்து, "இந்த வசனங்கள் ஆவியின் ஏவுதலால் எழுதப்பட வில்லை என்று எங்கள் வேதாகம பள்ளியில் எங்களுக்கு கற்பித்தார்கள்" என்றான்.

நல்லது, அவள், "தேவனுக்கு மகிமை" என்றாள்.

17. அவன், "அம்மா நீங்கள் அந்த ஜனங்களைப் போலவே நடந்து கொள்கிறீர்கள்" என்று சொல்லி, "ஏன் அதையே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்" என்றான்.

அவள், "தேனே நான் ஒன்றை நினைத்துக் கொண்டிருந்தேன்" என்றாள்.

அவன், "என்ன நினைத்துக் கொண்டிருந்தீர்கள்?" என்று கேட்டான்.

18. அதற்கு அவள், "ஆவியின் ஏவுதலால் எழுதப் படாத அந்த வேத வார்த்தைகளைக் கொண்டே தேவனால் என்னை குணமாக்க முடியும் என்றால், உண்மையில் ஆவியினால் ஏவப்பட்ட வேத வார்த்தைகளைக் கொண்டு அவரால் வேறு என்னவெல்லாம் செய்வார்?" என்றாள்.

ஆகவே, அதுதான்.. (சபையார் கைத்தட்டி ஆரவாரம் செய்கின்றனர் – ஆசி)

19. ஆகவே இப்பொழுது நாம் அரசு தரப்பு வழக்கறிஞர் தமது சாட்சிகளை அழைக்க அனுமதிக்கப் போகிறோம், முதலாவது சாட்சி,

20. நான் சில நிமிடங்களுக்கு முன்பு நான் இந்தப் பகுதியை வாசித்துக் கொண்டிருந்தபோது, திரு. ஸ்கோஃபீல்ட் கையெழுத்துப் பிரதிகளில் சிலவற்றைப் பற்றிச் சொல்கிறார் என்று சொன்னேன், அந்த கதை அங்கிருந்து தான் வந்திருக்கும். ஆனால் அது அப்படி அல்ல.

21. ஆகவே, திரு. அவிசுவாசி சாட்சிக் கூண்டிற்கு வருகிறார். இப்போது தேவனுடைய வார்த்தைக்கு எதிராக சாட்சி சொல்ல முடிவெடுக்கிறார். இப்போது அவர் தான் முதலாவது சாட்சியாக நிற்க வேண்டும். அவர் சத்தியப் பிரமாணம் செய்த பிறகு, இப்போது அவருடைய புகார் என்னவென்றால்,"தேவனுடைய வார்த்தையின் வாக்குத்தத் தங்கள் முற்றிலும் உண்மை அல்ல" என்பதே.

22. இப்போது, அரசு தரப்பு வழக்கறிஞர் கொண்டு வரும் இந்த சாட்சிகள் எல்லோரும் தங்களை விசுவாசிகள் என்று உரிமை கோருகிறார்கள். மேலும் அவர்கள் தாங்கள் எல்லோரும் விசுவாசிகள், அதற்கு ஆதாரமாக, "நாங்கள் விசுவாசிகளாக இல்லாவிட்டால் இப்படிப்பட்ட கூட்டங் களுக்கு ஒருபோதும் சென்றிருக்க மாட்டோம்" என்கிறார் கள். எனவே அவர்கள் தங்களை விசுவாசிகள் என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

23. மேலும் திரு. அவிசுவாசி தேவனுடைய வார்த்தைக்கு எதிராக வைக்கும் வாதம் என்னவென்றால், "மாற்கு 16 உண்மையல்ல, அது உண்மையாக இருக்க முடியாது" என்று கூறுகிறார். ஏனென்றால், அவர் தனது

சாட்சியாக நான் சில காலமாக நோய்வாய்ப்பட்டிருந்தேன், மேலும் அவர் ஒரு பெயரளவு பரிசுத்த ஆவி கூட்டத்திற்கு சென்றார், அங்கே ஜனங்கள் நோயாளிகள் மேல் கைகளை வைத்துக் கொண்டிருந்தார்கள், அவர்கள் தாங்கள் குணமடைந்து கொண்டிருப்பதாக சொன்னார்கள். எனவே அவர் இந்த ஜெப வரிசையில் சென்றார், மேலும் அவர் அப்படிச் செய்தபோது அவர் சில காலமாக மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தார், அவர் இந்த பரிசுத்த ஆவி என்று அழைக்கப்படும் பெயரளவு பரிசுத்த ஆவி கூட்ட மக்களால் ஜெபிக்கப்பட்டார். அவர்கள் கூச்சலிட்டுக் கொண்டும், சத்தமிட்டுக் கொண்டும் தாங்கள் குணமடைந்து விட்டதாக உரிமைகோரிக் கொண்டும் இருந்தார்கள். மேலும் திரு.அவிசுவாசி இந்த வரிசை வழியாக நடந்து வந்தார், அவர் மேல் கைகள் வைக்கப்பட்டன, "மேலும் அது இரண்டு மாதங்களுக்கு முன்பு நடந்தது, ஆனால் தான் குணமடைவதற்கான ஒரு அறிகுறியும் இல்லை." எனவே அவர் "தேவனுடைய வார்த்தையின் அந்தப் பகுதி உண்மையல்ல" என்று சொல்கிறார்.

24. இப்போது அரசு தரப்பு வழக்கறிஞர் தனது முதலாவது சாட்சியை கீழே இறக்குகிறார், அவர் தனது அடுத்த சாட்சியை சாட்சி கூண்டிற்கு கொண்டு வருகிறார். அடுத்த சாட்சி வருகிறார், அவர் திரு. சந்தேகவாதி அவர் சத்தியப் பிரமாணம் செய்துவிட்டு சாட்சி சொல்லும் சாட்சி கூண்டிற்கு வருகிறார். இப்போது அவர், தான் ஒரு விசுவாசி என்றும், அவர் நகரத்தில் ஒரு சபை இருப்ப தாகவும், அந்த சபை ஒரு உண்மையுள்ள போதகரை கொண்டிருப்பதாகவும், அவர் மிகவும் தேவபக்தியுள்ள மனிதன் என்று அந்த சபையார் சொன்னார்கள், மேலும் இந்த மனிதன் வேத வாக்கியத்தை விசுவாசித்தார், எனவே அவன் சொன்னான், "அவர் நோயாளிகளுக்காக ஜெபித்து, அவர்கள் மேல் எண்ணெய் பூசினார்கள், அவர் வேதாக மத்தில் உள்ள இந்த அதிகாரத்தை யாக்கோபு 5- வது

அதிகாரத்தில் 14- வது வசனத்தை வாசித்தார், "உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம் பண்ணக் கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணி யாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்;" என்கிற வேத வசனத்தை சுட்டிக்காட்டினார். எனவே அவன் நோயுற்ற மனிதனாக இருந்ததால், இந்த நீங்காத காய்ச்சலை தன்னால் ஒருபோதும் மேற்கொள்ள முடிய வில்லை என்று சொன்னான். மேலும் மருத்துவர் அவனால் அதிலிருந்து மீள முடியாது, அதற்கு அவனுக்கு எந்த வழியும் இல்லை என்று சொன்னார், எனவே அவன் "தேவனை அவருடைய வார்த்தையில் எடுத்துக் கொண் டான்." ஆகவே அவன் இந்த தேவபக்தியுள்ள மனிதன் என்று பெயரளவில் அழைக்கப்படும் போதகரை கண்டு பிடித்தான். சபையார் அனைவரும் தாங்களும் குணமடைந் ததாக பலவிதமான சாட்சிகளையும் மற்றவைகளையும் சொல்லிக் கொண்டிருந்தனர். மேலும் இந்த தேவபக்தி யுள்ள போதகர் தேவனுடைய வார்த்தையின்படி அவனுக்கு எண்ணெய்பூசி அவன் மேல் கைகளை வைத்து ஜெபித் தார். அந்த மனிதனுடைய நேர்மையை இந்த நபர் சந்தே கிக்கவில்லை, சபையாரின் நேர்மையையும் இவர் சந்தேகிக்கவில்லை; ஆனால் போதகர் வேதாகமம் சொல் வது போலவே கட்டளையை நிறைவேற்றினார், அவனுக்கு எண்ணெய் பூசி அவனுக்காக ஜெபித்தார். மேலும் அது ஆறு மாதங்களுக்கு முன்பு நடந்தது, ஆனால் இவர் குணமடைவதற்கான ஒரு அடையாளத்தையும் காண வில்லை" எனவே அவன் இந்த சாட்சியை கொடுத்தான். இப்பொழுது இரண்டாவது சாட்சி, சாட்சி கூண்டிலிருந்து கீழே இறங்குகிறார் .

25. அரசு தரப்பு வழக்கறிஞர் பின்னர் தனது அடுத்த சாட்சியை கொண்டு வருகிறார், அவர் திரு.

பொறுமையற்றவர். அவர் தேவனுடைய வார்த்தைக்கு எதிராக சாட்சி சொல்ல சத்தியப் பிரமாணம் செய்துவிட்டு முன் வருகிறார். அது உண்மையல்ல என்று அவர் உரிமை கோருகிறார். இந்த மனிதன் ஒரு நாள் மாற்கு 16 -ஆம் அதிகாரத்தை அல்லது மாற்கு 11 -ஆம் அதிகாரத்தை 22 -வது வசனம் தொடங்கி வாசித்துக் கொண்டிருந்தார் என்றும், அங்கே இயேசு தாமே... அவன் ஒரு சிவப்பு எழுத்து வேதாக மத்தை வைத்திருந்தான் என்றும், மேலும் அந்த சிவப்பு எழுத்துக்கள் இயேசு தாமே பேசிய சரியான வார்த்தைகள் என்றும் உரிமை கோருகிறான். அந்த சிவப்பு எழுத்து வேதாகமத்தில் மாற்கு 11 -ஆம் அதிகாரத்தில், இயேசு பேசிக் கொண்டிருந்த இடத்தில், அவர் இந்த மேற் கோளைச் சொன்னார், "இயேசு அவர்களை நோக்கி: "தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்; எவனா கிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்கிறார். மேலும் அவன் கால்களில் ஊனமுற்றவனாக இருந்தான் என்று இங்கே சொல்கிறான், ஏனென்றால், அவன் ஒரு சிறுவனாக இருந்ததிலிருந்து பல ஆண்டு களாக அவன் கால்களில் ஊனமுற்றவனாக இருந்தான். அவன் ஊன்றுகோல்களுடன் நடக்க வேண்டி இருந்தது, எனவே அவன் அந்த வசனங்கள் தேவனுடைய மாறாத வார்த்தையாக இருப்பதாக ஏற்றுக் கொண்டான். அவன் தன் இருதயத்திற்குள் "நான் நடப்பேன்" சொல்லிக் கொண் டான், மேலும் இயேசு கிறிஸ்துவின் வார்த்தையை ஏற்றுக் கொண்டான். அவர் சொன்னார், "நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவை களைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று

சொல்லுகிறேன்" என்று. அவன் நான் நடப்பேன் என்று சொன்னான். இயேசு கிறிஸ்துவின் வார்த்தையையும் ஏற்றுக் கொண்டான், ஆகவே அவன் நடப்பான் என்று விசுவாசித் ததாக கூறுகிறான். ஏனென்றால் இயேசு "இந்த மலையைப் பார்த்து பெயர்ந்து போ என்று சொன்னால் அப்படியே நடக்கும், நீங்கள் ஜெபிக்கும் பொழுது நீங்கள் கேட்டதை பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசியுங்கள் அப்பொழுது அவைகளைப் பெற்றுக் கொள்வீர்கள்"என்று சொன்னார். ஆகவே நான் அப்படியே விசுவாசித்தேன் என்று அவன் சொன்னான். மேலும் அவன் அதற்காகக் கேட்டான், அதற் காக ஜெபித்தான், அவன் அதை பெற்றுக் கொள்வேன் என்று அறிக்கை செய்தான். ஆனால் அது ஐந்து ஆண்டு கள் ஆகிறது.. ஆனால் இன்னும் என் கால்களில் ஊனம் இருக்கிறது, அவன் எந்த விதத்திலும் குணமடையவில்லை என்று அவன் சொன்னான் .

26. இப்போது அரசு தரப்பு வழக்கறிஞர் தனது சாட்சிகள் அளித்த வேத வாக்கியத்தின் மூன்று வெவ்வேறு மேற்கோள்களுக்குப் பிறகு முன் வருகிறார். (அது யூத நீதிமன்றத்தில் ஒரு வழக்கின் சாட்சி) தேவனுடைய வேதாகமத்தில் எழுதப்பட்டிருந்த வேத வாக்கியத்தின் மூன்று சாட்சிகளை கொடுக்கிறார், அதில் தேவன் மாம்ச மாகி, ஒரு மனிதனுக்குள் வாசம் செய்த, மனுஷ குமார னாகிய, இயேசுகிறிஸ்து என்று சொன்னதாக கருதப்படு கிறது, மாறாத தன்மையுள்ளவர். மேலும் அரசு தரப்பு வழக்கறிஞர் இப்போது ஜனங்களாகிய உங்களுக்கு முன் வழக்கை நிலைநிறுத்த வருகிறார்.

இப்போது, நீங்கள்தான் நடுவர் குழு என்பதையும் நீங்களே நீதிபதி என்பதையும், நினைவில் கொள்ளுங்கள்.

27. இப்போது அரசு தரப்பு வழக்கறிஞர் நீங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறார், அவர் வழக்கை நிலை நிறுத்தும் போது, மீண்டும் இந்த ஜனங்கள் மற்றவர்களைப்

போலவே தங்களை விசுவாசிகள் என்று உரிமை கோரு கிறார்கள். எனவே இவரும் உரிமை கோருகிறார், அரசு தரப்பு வழக்கறிஞர், "தேவன் தமது வார்த்தையில் சொல்லப்பட்ட வாக்குத்தத்தங்களை அவரால் நிறைவேற்ற முடியாமல் இருக்கும் பொழுது, இப்படிப்பட்ட அவசரமான வாக்குத்தத்தங்களை அவர் வேதத்தில் வைப்பதில்லை என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார். ஏனெனில், தேவன் அவற்றை தம்மை விசுவாசிக்கிற பிள்ளைகளுக்கு உரிமை கோரும்படியாக கொடுக்கிறார், உண்மையில்லாத அந்த வார்த்தைகளை அவர்கள் உரிமை கோருவதன் மூலம் அவர்கள் அவமானத்திற்கும், இகழ்ச்சிக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள். இப்போது அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த மூன்று சாட்சிகளும் தேவனுடைய வார்த்தை சொல்லுகிறபடியே சரியான விதத்தில் அவர்கள் செயல்பட்ட பிறகும், அந்த மூன்று சாட்சிகளுடைய வாக்குத்தத்தங்களையும் நிறை வேற்ற தவறிவிட்டார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார். மேலும் அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த மூன்று சம்பவத்திலும் உரிமை கோரிய இந்த விசுவாசிகளின் விஷயத்திலும் தேவன் தமது வார்த்தையை நிறைவேற்றியதற்கான எந்த வெளிப்பாட்டை யும் செய்வதற்கு தவறிவிட்டார் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும் என்று (தன்னுடைய வாதத்தை மிகவும் வலியுறுத்தி) கூறுகிறார்.

28. பின்னர் மீண்டும், அரசு தரப்பு வழக்கறிஞர் வேறு ஒன்றுக்கு நேராக உங்கள் கவனத்தைத் திருப்ப விரும்பு கிறார். அதாவது "விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்" என்று 'தேவன்' வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். ஆனால் இந்த பெயரளவு விசுவாசிகள் அவருடைய வார்த்தையை கடைப்பிடிக்க முயற்சித்தனர், ஆனால் 'அவரோ' தம்மு டைய வாக்குத்தத்தத்தை காத்துக்கொள்ள தவறிவிட்டார், ஆகையால் அதினிமித்தம்தான் 'அவர்' மீது வாக்கை

காப்பாற்றத் தவறிய குற்றத்திற்காக வழக்கு தொடுக்கப் படுகிறது என்பதை நீங்கள் எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும் என்று அரசு தரப்பு வழக்கறிஞர் விரும்புகிறார்.

29. மீண்டும் அரசு தரப்பு வழக்கறிஞர் தேவனுடைய வார்த்தையின் மற்றொரு பகுதிக்கு உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறார். "அவர் தனது மரணத்திற்குப் பிறகு உயிரோடு இருப்பதாக உரிமை கோருகிறார். இயேசு தனது மரணத்திற்குப் பிறகு உயிரோடு இருப்பதாக உரிமை கோருகிறார்." ஆனால் தனது கட்சிக்காரர் கைகளில் ஆணிகளின் வடுக்களோடும், உடல் முழுவதும் சவுக்கடி களால் உண்டான தழும்புகளோடும், கால்களில் ஆணி துளைத்த காயங்களும் கொண்ட எந்த ஒரு மனிதனையும் பார்க்கவில்லை என்றும், எந்த மனிதனுடைய தலையிலும் முள்கிரீடத்தை தன்னுடைய கட்சிக்காரர் பார்க்கவில்லை என்றும் கூறுகிறார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று அரசு தரப்பு வழக்கறிஞர் விரும்புகிறார். ஆனால் அவரோ அவருடைய மரணத்திற்குப் பிறகும் இன்னும் உயிரோடு இருப்பதாக உரிமை கோருகிறார். மேலும் அவர் எபிரேயர் 13: 8 ல் அவர் ஜீவிக்கிறார் என்று கூறுகிறார். ஆனால் அது அப்படியல்ல. அவர் லூக்கா 17-ஆம் அதிகாரத்தில் 30-வது வசனத்திலும் உரிமை கோருகிறார், நாம் இப்பொழுது வாழும் இந்த நாட்களில் அவர் தம்மை வெளிப்படுத்துவார் என்றும், அவர் அப்போது இருந்தது போலவே இப்போதும் இருப்பார் என்றும் உரிமை கோருகிறார். இப்போது அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தை ஆணித்தரமாக உங்களுக்கு முன்பாக நிலைநாட்டியுள்ளார். அதாவது வெளிப்படுத்தல் 10-ஆம் அதிகாரத்தில் ஏழாம் தூதன், அவன் எக்காளம் ஊதப்போகிற போது (அதுதான் லவோதிக்கேயா சபை காலத்தின் தூதன். அவன் சபையை பிதாக்களுடைய விசுவாசத்துக்கு திரும்ப அழைக்க வேண்டியவனாய் இருக்கிறான்) இந்த தூதன் எக்காளம்

ஊதும் போது தேவனுடைய அனைத்து இரகசியங்களும் அந்த நாளில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்று சொல்லப்படுகிறது. மல்கியா 4 ல் பரிசுத்த தீர்க்கதரிசிகள் அந்த நாளில் ஒரு தீர்க்கதரிசி எழும்புவான் என்றும், அந்த உரிமை கோரல்களை அவன் உரிமை கோருவான் என்றும் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். ஆனால் அது போன்று எதுவுமே இல்லை! அவர் வானமும் பூமியும் ஒழிந்து போகும், ஆனால் அவருடைய வார்த்தைகளோ ஒரு போதும் ஒழிந்து போவதில்லை என்றும் உரிமை கோருகிறார்.

30. இப்போது அரசு தரப்பு வழக்கறிஞர் இங்கே ஒரு வழக்கை பெற்றிருக்கிறார், அவர் அதைச் சரியாக நிலை நிறுத்துகிறார். இப்போது அவர் அதை பார்வையாளர் களாகிய உங்களிடம், நீதிபதி மற்றும் நடுவர் குழு இரண்டுமாக இருக்கும் உங்களிடம் ஒப்படைக்கிறார். இப்போது நாம் அவருடைய தரப்பையும், அவருடைய சாட்சிகளின் வாக்குமூலங்களையும் கேட்டோம். தேவன் அளித்த எல்லா வாக்குத்தத்தங்களிலும், அவைகள் சத்தியம் என்று என்னால் எதையும் காண முடியவில்லை, எனவே அவர் தேவனுக்கு எதிராகவும், இயேசுவுக்கு எதிராகவும் கண்மூடித்தனமான வாக்குத்தத்தங்களை செய்தாக ஒரு குற்றச்சாட்டை வைக்க முயற்சிக்கிறார். ஏனென்றால், தேவன் இந்த நாளுக்காக செய்த வாக்குத்தத்தங்கள் முற்றிலும் கண்மூடித்தனமானவை. அவர் இந்த நாளுக்காக செய்த வாக்குத்தத்தங்கள் முற்றிலும் கண்மூடித்தன மானவை. மேலும் அவர் அவற்றை காத்துக்கொள்ளு கிறதில்லை! இப்போது நாம் அவருடைய தரப்பைக் கேட்டோம், எனவே இப்போது அரசு தரப்பு வழக்கறிஞரின் சாட்சியும், அரசு தரப்பு வழக்கறிஞரும் கீழே இறங்கட்டும்.

31. மேலும் இப்போது நாம் பிரதிவாதியின் சாட்சியை அழைப்போம். பிரதிவாதி தரப்பின் சாட்சி பரிசுத்த

ஆவியானவர். இப்போது அவர் வந்து பிரதிவாதிக்காக சாட்சிக்கூண்டில் ஏறுகிறார். இந்த நீதிமன்றத்தின் கவனத் திற்குக் கொண்டுவர விரும்பும் முதல் விஷயம் என்ன வென்றால் அல்லேலூயா, "அரசு தரப்பு வழக்கறிஞர் ஆதியிலே ஏவாளுக்கு செய்தது போலவே ஜனங்களுக்கும் வார்த்தையை தவறாக வியாக்கியானம் செய்கிறார்" என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவர்(தேவன்) அவளுக்கு வியாக்கியானம் அளிப்பவராக இருந்தார். அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று கூறியிருந்தார். மேலும் மரணமோ, துக்கமோ அல்லது எதுவும் இருக்காது, ஆனால் அவன்(சாத்தான்) சுற்றி வந்து வார்த்தையை தவறாக வியாக்கியானம் செய்தான். எனவே மனிதன் தேவனுடைய வார்த்தையிலிருந்து பின்வாங்கினபோது, அது அவர்களை என்னவாக்குகிறது? அவன் தேவனால் தடுக்கப்படவில்லை. ஆனால், நீங்கள் பாருங்கள், சாத்தான் ஏவாளுக்கு வார்த்தையின் வியாக்கியானியாக இருந்தான். அவள் தன் புருஷனுக்கும், தேவனுக்கும் செவிசாய்க்க வில்லை, ஆனால் அவள் வார்த்தைக்கு அரசு தரப்பு வழக்கறிஞரின் வியாக்கியானத்தை ஏற்றுக்கொண்டாள். மேலும் அவனுக்கு ஒரு வியாக்கியானத்தை கொடுக்க எந்த உரிமையும் இல்லை. தேவனே அவருடைய சொந்த வார்த்தையின் வியாக்கியானியாய் இருக்கிறார். அதுமட்டு மல்ல எந்த ஒரு மனிதனுக்கும் உரிமை இல்லை. நாம் அவருக்கு அவசியம் இல்லை; அவர் தம்முடைய வார்த் தையை காத்துக் கொள்கிறார் என்று நாம் விசுவாசிக் கிறோம். அவர் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, அதாவது ஆதியிலே உரைக்கப்பட்ட தேவனு டைய முதல் வார்த்தைகளுக்கு வியாக்கியானம் சொன்ன, இன்றைக்கு இந்த பிற்பகலில் இந்த நீதிமன்றத்திற்கு முன்பாக குற்றச்சாட்டை கொண்டு வர முயற்சிக்கிற அதே அரசு தரப்பு வழக்கறிஞர், அவன் வார்த்தையை தவறாக வியாக்கியானம் செய்தான். அவன் ஏவாளின்

வியாக்கியானியாக இருந்தான். அதுதான் பிரதிவாதி சாட்சி உங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்பும் முதல் காரியம்.

32. முதலாவதாக, அவர் உங்களுக்கு இந்தக் கருத்தை அளிக்க விரும்புகிறார், அதாவது, வாக்குத்தத்தம் விசுவாசி களுக்கு மட்டுமே, பாவனை விசுவாசிகளுக்கோ, சந்தேக வாதிகளுக்கோ, அல்லது அவிசுவாசிகளுக்கோ அல்ல. அது விசுவாசிக்கிறவர்களுக்கு மட்டுமே! இப்போது அவர், பிரதிவாதி சாட்சி (பரிசுத்த ஆவியானவர்) இந்த வாக்குத் தத்தங்கள் விசுவாசிகளுக்கு மட்டுமே என்பதை இந்த நீதிமன்றம் உணர வேண்டும் என்று விரும்புகிறார்.

பின்னர் குறுக்கு விசாரணை, "இவர்கள் விசுவாசிகள்!" என்று கூறுகிறார்.

33. மேலும் இப்பொழுது, பிரதிவாதி தரப்பின் சாட்சியானவர்க்கே அவர்கள் விசுவாசிகளா இல்லையா என்பது தெரியும். ஏனெனில், அவர்தான் வாக்குத்தத் தத்தை உயிர்ப்பிக்கிறவர். இப்போது நீங்கள் அதை எப்படிக் கடந்து செல்லப் போகிறீர்கள்? அக்கினி போன்ற விசாரணை நடந்து கொண்டிருக்கிறது, நீங்கள் அதை எப்படிக் கடந்து செல்லப் போகிறீர்கள் என்பதை பரிசுத்த ஆவியானவருக்குத் தெரியும். ஏனென்றால், வார்த்தையில் உள்ள ஜீவன் அவரே. அவர் தான் வார்த்தையை உயிர்ப் பிக்கிறவர். உங்கள் சரீரம் ஆவியினால் உயிர்ப்பிக்கப் படுகிறது போலவே; ஆவி இல்லாமல், சரீரத்தினால் எந்தப் பலனும் இல்லை, சரீரம் மரித்திருக்கிறது. ஆவியில்லாமல், வார்த்தையும் மரித்திருக்கிறது. மேலும் வார்த்தையை கொண்டு வரவும், அதை உயிர்ப்பிக்கவும் ஆவி தேவைப் படுகிறது. அவரே இந்த வார்த்தையை உயிர்ப்பிக்கிறவர், அவர்தான் பிரதிவாதி சாட்சி. ஆமென். நீங்கள் அதை எப்படிக் கடந்து செல்லப் போகிறீர்கள்? அவர்தான் உயிர்ப் பிக்கிறவர் என்பதை இந்த நீதிமன்றம் நன்றாகப் புரிந்து

கொள்ள வேண்டும், அவர்தான் வார்த்தையை உயிர்ப்பிக் கிறார் என்பதை அறிய வேண்டும்.

34. மீண்டும், அவர் இந்த நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தத்தில், அவர் அவர்கள் குணமடைய எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்தையும் நிர்ணயிக்கவில்லை. அவர் சொன்னார், "விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளிகளை இரட்சிக்கும், மேலும் தேவன் அவர்களை எழுப்புவார்." அவர் "அப்பொழுதே" என்று சொல்லவில்லை. "வியாதி யஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்." அவர் ஒருபோதும் ஒரு நாள், மாதம், வருடம் என்று சொல்லவில்லை. அவர் வெறு மனே, "அவர்கள் சொஸ்தமாவார்கள்" என்று சொன்னார். பிரதிவாதி தரப்பின் சாட்சி உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புவது, அங்கே ஒரு அற்புதம் நிகழ்த்தப்படும் என்று அவர் சொல்லவில்லை. அவர் வெறுமனே, "அவர் கள் சொஸ்தமாவார்கள்" என்று கூறினார். வார்த்தையை சரியாக வியாக்கியானம் செய்யுங்கள். "அவர்கள் சொஸ்த மாவார்கள்."அவர் எந்த ஒரு குறிப்பிட்ட நேரத்தையும் நிர்ணயிக்கவில்லை. மேலும், அது அவர்கள் விசுவாசி களாக இருந்தால்! அவர்கள் விசுவாசிகளாக இருந்தால்! அது குணமடையும். "வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள் அப்பொழுது, அவர்கள் சொஸ்தமாவார்கள், " அது இப்போதாக இருந்தாலும், ஒரு வாரம், மாதம், வருடம், பத்து வருடங்கள், இருபது வருடங்கள், ஐம்பது வருடங்கள். "அவர்கள் சொஸ்தமாவார்கள்,"அவர் அப்படிச் சொன்னார்! அதாவது அவர்கள் தங்கள் விசுவாசத்தை உறுதியாகப் பற்றிக்கொண்டிருந்தால்.

இதுவே பிரதிவாதி தரப்பின் சாட்சி.

35. மேலும், இன்னொரு காரியத்தை பிரதிவாதி சாட்சி இந்த நீதிமன்றத்தின் கவனத்திற்கு இந்த பிற்பகலில்

கொண்டு வர விரும்புகிறார். வார்த்தை ஒரு விதை, அந்த விதை அதை உயிர்ப்பிக்க செழிப்பான மண்ணில் விழ வேண்டும். விதை ஒரு பாறையில் வளராது. விதைக்கு செழிப்பான மண் இருக்க வேண்டும். மேலும் வார்த்தை விசுவாசத்தில் விழ வேண்டும், அதுதான் வார்த்தையை நிறைவேறுதலுக்குக் கொண்டுவரும் செழிப்பான மண். இப்போது பிரதிவாதி சாட்சி இந்த நேரத்தில்...

36. நாம் இன்னும் பலவற்றை கூறலாம், காரியங்கள் சொல்லப்படலாம், ஆனால் உங்களை அதிக நேரம் வைத்திருக்க விரும்பவில்லை, ஒரு மிகப் பெரிய ஜெப வரிசை இருக்கிறது. நீதிமன்றமாகிய நீங்கள் கேட்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

37. இப்போது பிரதிவாதி தரப்பு சாட்சி தனது சாட்சியை அழைக்கப் போகிறார். பாருங்கள்! பிரதிவாதி சாட்சிக்கு ஒரு சாட்சியை அழைக்க உரிமை உண்டு, ஏனென்றால், அரசு தரப்பு வழக்கறிஞரின் முறை வந்த போது அவர் ஒரு சாட்சியை அழைத்தார். இப்போது பிரதிவாதி தரப்பு சாட்சி ஒரு சாட்சியை அழைக்கப் போகிறார். மேலும் பிரதிவாதி சாட்சி இந்த நீதிமன்றத்திற்கு இந்த பிற்பகலில் தீர்க்கதரிசி நோவாவை முன் வைக்க விரும்புகிறார். நோவா அவர்களே முன்னே வாருங்கள், வந்து சாட்சி கூண்டில் ஏறுங்கள். இப்போது உங்களுக்கு கொடுக்கப்பட்ட தேவனுடைய வார்த்தையை பற்றி ஒரு சாட்சி உங்களிடம் உள்ளதை நான் புரிந்து கொள்கிறேன்.

"ஆம்."

38. இந்த நீதிமன்றத்தில், இன்றைய சாட்சியானவர் சொல்ல விரும்புவது என்னவென்றால், அவர் வெறும் ஒரு சாதாரண மனிதனாக இருந்தார். மேலும், அவர் தேவனை விசுவாசித்தார். அவர் ஒரு விஞ்ஞான யுகத்தில் வாழ்ந்தார், அங்கே அவர்கள் அற்புதங்களின் நாட்கள் ஒருபோதும் இருந்ததில்லை என்று விசுவாசித்தார்கள். பூமியின் மீது

மழை ஒருபோதும் பெய்ததில்லை, ஆனால் ஒரு நாள் அவர் தேவனை சந்தித்தார். தேவன் ஜனங்களின் இரட்சிப்புக்காக ஒரு பேழையை தயார் செய்ய அவரிடம் கூறினார், அந்த பேழைக்குள் வருகிற அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள். அவர் சாட்சி சொல்ல விரும்புவது என்னவென்றால், அவர் பரிபூரணமாக தனது முழு இருதயத்தோடும் அதை விசுவாசித்தார். அவர் அதை பிரசங்கிக்கச் சென்றார். அவர் அதை பிரசங்கிக்க மாத்திரம் செய்யவில்லை, ஆனால் தனது கிரியைகள் தனது விசுவாசத்தைப் பற்றி சாட்சி அளிக்கும்படி அவர் பேழையை கட்டத் தொடங்கினார்.

39. இந்த சாட்சியானவர் திரு. அவிசுவாசியையும், திரு. சந்தேகவாதியையும், திரு, பொறுமையற்றவரையும் சுட்டிக் காட்ட விரும்புகிறார். அவர்கள் இரவும் பகலும் எனக்கு தொல்லை கொடுத்தார்கள். "அந்த மழை எப்போது பெய்யப் போகிறது? நீங்கள் ஒரு வருடத்திற்கு முன்பு கூறினீர்கள், மேலும் அங்கே மழையே இல்லை, நாங்கள் விஞ்ஞானிகளிடம் சென்றோம், அவர்களும் அங்கே மழையே இல்லை என்று நிரூபித்தார்கள்" என்றார்கள். அவர்கள் என்னைப் பார்த்து ஏளனம் செய்தார்கள், அவர்கள் நான் பைத்தியம் பிடித்தவன் என்றும், விஞ்ஞான ஆராய்ச்சிக்கு எதிரான, முட்டாள்தனமான, அப்படிப்பட்ட ஒரு கண்மூடித்தனமான வாக்குத்தத்தத்தை விசுவாசிக் கிறேன் என்றும் உரிமை கோரினார்கள். ஆனால் அவர் சொன்னார், "நான் அந்த வேலை திட்டத்தில் உறுதியாக நின்றேன். ஏனென்றால், அது தேவனுடைய வார்த்தை, அது ஒருபோதும் தவறாது என்றும் நான் அறிந்திருந்தேன். ஆகவே நான் பேழையை கட்டினேன்.

40. மேலும் பேழை முடிக்கப்பட்ட பிறகும் நான் பேழையின் வாசலில் நின்று கொண்டு அவர்களுக்கு பிரசங்கம் செய்து கொண்டிருந்த பொழுது, அவர்கள்

பேழையைச் சுற்றி அங்குமிங்கும் ஓடி, "நூற்றி இருபது வருடங்கள் ஆகிவிட்டது, உன்னுடைய மழை எங்கே? ஆகவே, நீ பார் உன்னுடைய உழைப்பு அனைத்தும் வீணாய் போயிற்று" என்றார்கள். எங்கள் விஞ்ஞானிகள் சரியாகத்தான் சொன்னார்கள், அங்கே மழை என்று அப்படி எதுவும் இல்லை மேலும், அப்படிப்பட்ட ஒரு கண்மூடித் தனமான வாக்குத்தத்தை விசுவாசிப்பதற்கு நீ ஒரு சாதாரண வயதானவனாக இருக்கிறாய்" என்றனர்.

41. அதன் பின்னர் ஒரு நாள் வந்தது, நான் ஒரு காலையில் பேழையை விட்டு வெளியே நடந்து செல்லலாம் என்று புறப்பட்டேன், அப்போது திடீரென்று எந்த கையும் அந்த கதவின் மேல் படாமலேயே அந்த கதவு என் முகத்திற்கு நேராக மூடிக்கொண்டது. நான் உள்ளே வைத்து முத்திரையிடப்பட்டேன். பின்னர் என்ன நடந்தது? நான் கட்டியிருந்த ஒரு ஏணியின் மீது ஏறி மேலே சென்று ஜன்னலை திறந்தேன், அப்போது வெளியே திரு.சந்தேகவாதி, திரு.அவிசுவாசி மற்றும் திரு. பொறுமை யற்றவர் அங்கே உட்கார்ந்திருப்பதை கண்டேன். அவர்கள், "இப்பொழுது, என்ன ஆயிற்று பார்த்தீர்களா? அந்த ஆள் தன்னைத்தானே பேழைக்குள் அடைத்துக் கொண்டான்!" என்றனர். மேலும் நிச்சயமாக இப்பொழுது மழை பெய்யும் என்று நான் நினைத்தேன். மேலும் நான் மே மாதம் 27ஆம் தேதி அல்லது 17-ஆம் தேதியில் அதற்குள்ளே சென்றேன், கதவு என் முகத்திற்கு நேராக மூடியது, நான் என் ஜனங் களை ஒன்றாக அழைத்து, "அடுத்த சில நிமிடங்களில் மழை பெய்யப்போகிறது," என்றேன். மேலும் நாள் முழுவதும் திரு. அவிசுவாசியும், திரு. சந்தேகவாதியும், திரு. பொறுமையற்றவரும் என் பேழையைச் சுற்றி நடந்து, என்னைப்பற்றி எல்லாவிதமான தீமையான காரியங்களை யும், விமர்சனங்களையும் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் நான் என் சபையாரிடம், "அமைதியாயிருங்கள். தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்" என்றேன்!

42. இரண்டாவது நாள் சூரியன் பிரகாசமாக உதித்தது; மழை இல்லை, இடி இல்லை, மின்னல் இல்லை. மூன்றாவது நாள் அதேபோல, நான்காவது, ஐந்தாவது, ஆறாவது. ஆனால் மே மாதம் 24-ஆம் தேதி காலையில், நூற்று இருபது வருடங்களுக்குப் பிறகு, வானத்திலிருந்து ஒரு பெருமழை இறங்கி வந்தது. மேலும் அங்கே திரு. சந்தேகவாதி, திரு. அவிசுவாசி மற்றும் திரு. பொறுமை யற்றவர் போன்றவர்களால் அபிஷேகம் பண்ணப்பட்ட வர்கள் அனைவரும் வெளியே அழிந்து போனார்கள்."

43. பிரதிவாதி, "சரி நோவா அவர்களே, கீழே இறங்குங்கள், நான் இன்னொரு சாட்சியை அழைக்க விரும்புகிறேன்," என்கிறார். "திரு. ஆபிரகாம் அவர்களே, முன்னால் வாருங்கள், நீங்கள் சாட்சி கொடுக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்."

44. திரு. ஆபிரகாம் சாட்சி கூண்டில் ஏறிச் சொல்கிறார், நான் கல்தேயர் நாடாகிய ஊர்- நகருக்கு வெளியே என் பண்ணையில் வேலை செய்து கொண்டிருந்தேன். நான் என் ஒன்று விட்ட சகோதரியை மணந்திருந்தேன், அவள் பெயர் சாராய். என் பெயர் ஆபிராம். நான் தேவனை சந்தித்தேன். தேவன் என்னிடம், நான் சாராள் மூலமாக ஒரு குழந்தையை பெறப்போகிறேன் என்று சொன்னார். மேலும் சாராள் அந்த நேரத்தில் அறுபத்தைந்து வயது உடைய வளாக இருந்தாள். நான் எழுபத்தைந்து வயது உடைய வனாக இருந்தேன். மேலும் தேவன் என்னிடம், நான் சாராள் மூலமாக ஒரு குழந்தையை பெறுவேன் என்றும், அந்த குழந்தை மூலமாக முழு உலகமும் ஆசீர்வதிக்கப் படும் என்றும், நான் ஜாதிகளின் தகப்பனாக இருப்பேன் என்றும் சொன்னார். நான் விரைவாக திரும்பினேன். ஏனென்றால், இந்த மகிழ்ச்சி என் இருதயத்தில் இருந்தது.

நான் எப்போதும் குழந்தைகளை நேசிப்பேன், நான் ஒருபோதும் எதையும் பெற மாட்டேன் என்று நினைத் திருந்தேன். ஆனால் தேவன் நான் அதை பெறப் போகி றேன் என்று சொன்னபோது, நான் அவரை விசுவாசித் தேன். நான் அதற்கான ஏற்பாடுகளை செய்வதற்காக ஒரு மருத்துவரிடம் சென்றேன். அவர் என்னை தமது அலுவல கத்திலிருந்து வெளியே துரத்தினார். திரு. அவிசுவாசி அங்கே உட்கார்ந்திருந்தார், நான் தெருவுக்கு வெளியே சென்றேன். அதிகாரிகள் ஒரு மன நோயாளியின் வழக்குக் காக என்னை கைது செய்ய விரும்பினார்கள். பின்னர் வருடங்கள் செல்லச் செல்ல திரு. பொறுமையற்றவர் இரவும் பகலும் எனக்கு தொல்லை கொடுத்தார்.

45. "முதல் மாதம், நான் என் மனைவி சாராளிடம் கேட்டேன், பாருங்கள்! அவளுக்கு மாதவிடாய் எப்போதோ நின்று விட்டது. அது பெண்களுக்கு இருப்பது போலவே அவளுக்கு அந்த வழிபாடு நின்று விட்டது. மேலும் நான் சாராளிடம், 'அன்பே நாம் எல்லா சிறிய காலுறைகளையும், எல்லா தொப்பிகளையும் மற்றும் ஊசிகளையும் வாங்கி விட்டோம் இல்லையா?' என்று கேட்டேன். அவள் 'ஆம், அனைத்தும் தயார்' என்றாள். 'நீ பார், அது இப்போது நடக்கப்போகிறது' என்று நான் சொன்னேன். மேலும் 28 நாட்களின் முடிவில் நான், 'அன்பே! நீ எப்படி உணர் கிறாய்?' என்று கேட்டேன். அவள், 'எந்த வித்தியாசமும் இல்லை, ஆபிரகாம்' என்றாள். நான் சொன்னேன், 'பரவா யில்லை, தேவனை ஸ்தோத்தரி, சாரளே, நீ அதை சந்தேகப்படாதே, தேவன் அப்படிச் சொன்னார். எனவே நாம் எப்படியும் அதை பெறப் போகிறோம்,' என்று. இது இதேபோல் வருடங்கள் முழுவதும் தொடர்ந்தது."

46. "மேலும் வருடங்களுக்கு மேல் வருடங்கள் கடந்து சென்றபோது, திரு. சந்தேகவாதி, திரு. அவிசுவாசி அவர்கள் அனைவரும் என்னைப் பார்த்து ஏளனம் செய்

தார்கள். ஆனால் 25 வருடங்களுக்குப் பிறகு, நான் நூறு வயதாக இருந்தபோது குழந்தை பிறந்தது. தேவன் நான் அடுத்த நாள் குழந்தையை பெறுவேன் என்று என்னிடம் சொல்லவில்லை. அவர் 'நான் அதை பெறுவேன்' என்று சொன்னார். மேலும் நான் அதற்கு எவ்வளவு நேரம் ஆகும் என்பதை பொருட்படுத்தவில்லை. தேவன் அதை வாக்குத் தத்தம் பண்ணினார்! நான் 25 வருடங்கள் காத்திருந்தேன். எனக்கு அவ்வளவு வயதாகி விட்டது, நான் சாகப் போகிறேன் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆனால் நான், 'என்னால் சாக முடியாது,' வாக்குத்தத்தம் எனக்குத் தான், தேவன் அப்படிச் சொன்னார்" என்றேன் .

47. திரு. ஏளனக்காரரும், திரு. அவிசுவாசியும், திரு. சந்தேகவாதியும், திரு. பொறுமையற்றவரும், மனிதனால் அபிஷேகம் பண்ணப்பட்டு, தொடர்ந்து என்னிடத்தில் வந்து, 'ஆபிரகாமே, ஜாதிகளின் தகப்பனே இப்போது உமக்கு எத்தனை பிள்ளைகள் இருக்கின்றனர்?' என்று கேட்டார்கள். ஆனால் நான் உறுதியாக பற்றிக் கொண் டேன். ஏனென்றால், நான் தேவனுடைய வார்த்தையில் அவிசுவாசத்தினால் ஒருபோதும் தள்ளாடவில்லை. தேவன் தாம் வாக்குத்தத்தம் பண்ணின ஒவ்வொரு வார்த்தை யையும் நிறைவேற்ற வல்லவராய் இருக்கிறார் என்று அறிந்திருந்தேன். என் சொந்த சரீரம் செத்துப் போனது என்பதை கூட பொருட்படுத்தவில்லை, மேலும் சாராளின் கர்ப்பத்தின் மரித்த தன்மையையும் நான் நினைக்கவில்லை, ஆனால் நான் தேவனை விசுவாசித்தேன். அவர்கள் நல்லது, நான் நினைக்கிறேன், இருபத்தைந்து வருடங் களுக்கு முன்பு நீ குழந்தையை பெறப்போவதாக கூறினாய் என்றார்கள். 'ஆம் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்பு நான்தான் சொன்னேன்' என்றேன். ஆனால் திரு. பொறுமை யற்றவர், 'சரி இருபத்தைந்து வருடங்கள் கடந்து விட்டதே' என்று சொன்னார். இப்போது உன்னை நீயே பார், உன்

மீசையெல்லாம் வளர்ந்து கிட்டத்தட்ட முழங்கால் வரை தொங்குகிறது. 'நீ ஒரு கிழவன்' என்றார். தேவன் நான் எப்போது குழந்தையை பெறப்போகிறேன் என்று என்னிடம் கூறவில்லை என்பதை நான் அவருக்குத் தெரியப்படுத்தினேன். 'நீ சாராள் மூலமாக அதை பெறு வாய்' என்று அவர் சொன்னார். அது அதை தீர்த்துவைத்து விட்டது. நான் அதை உறுதியாகப் பற்றிக் கொண்டேன். இப்போது வார்த்தை ஒருபோதும் எப்போது என்று சொல்லவில்லை, அது இருக்கும் என்று சொன்னது!"

48. இன்னொரு சாட்சியை விரைவாக அழைப்போம், நமக்கு அதிக நேரம் இல்லை. நாம் அவர்களில் நூற்றுக் கணக்கானவர்களை அழைக்க முடியும். இன்னொரு சாட்சியை கூட நாம் அழைப்போம். மோசே தாமே வந்து சாட்சி அளிக்கட்டும்.

49. "ஏன்," அவன் சொன்னான், "நான் எகிப்தியர்களின் எல்லா ஞானத்திலும் பயிற்சி பெற்றிருந்தேன். நான் யாரும் பெறாத ஒரு பேராசிரியர் பட்டத்தை உடையவனாயிருந் தேன். ஆனால் ஒரு நாள் எனக்கு எண்பது வயதாகும் பொழுது வனாந்தரத்தின் பின்புறத்தில் நான் தேவனை சந்தித்தேன். மேலும் அவர் ஒரு அடையாளத்தின் வடிவத்தில் இருந்தார், அவர் ஒரு முட்புதரில் எரியும் அக்கினியாக இருந்தார். அவர்-அவர் என்னிடம், அவர் தம்முடைய ஜனங்களின் பெருமூச்சுகளை கேட்டார் என்றும், மேலும் அவர் அவர்களை விடுவிப்பதற்கான அவருடைய வாக்குத்தத்தத்தை நினைவு கூர்ந்தார் என்றும், அதற்காக "நான்" உன்னை அனுப்புகிறேன் என்றும் கூறினார். ஆனால் நான், "நான் யார்? எனக்கு நன்றாகப் பேச வராது, நான்-நான் ஒரு வேத பண்டிதனும் அல்ல, ஆகையால் என்னால் போகமுடியாது" என்றேன். அவர் உனக்கு இரண்டு அடையாளங்கள் கொடுக்கப்படும். அவற்றில் ஒன்று உன் கையில் இருக்கும், மற்றொன்று உன்

கோலில் இருக்கும் என்றார். மேலும் அவர்கள் இந்த அடையாளத்தின் சத்தத்தை கேட்கவில்லை என்றால், பின்னர் கொஞ்சம் தண்ணீரை நிலத்தில் ஊற்று, அது இரத்தமாக மாறும், பின்னர் அது அதை முடித்துவிடும்" என்று கூறினார்.

50. "தேவன் எனக்குக் கொடுத்த அடையாளத்தை நான் எடுத்துக் கொண்டு பார்வோனுக்கு முன்பாக சென்றபோது, போதகர் பார்வோன் அவர் என் வரத்தை ஒரு வகையான அற்பமான ஒன்றாகக் காட்ட முயற்சித்தார். அவர் கேவலம் ஒரு குறி சொல்பவன் அல்லது ஒரு சாதாரண எகிப்தியன், சாதாரண ஒரு மந்திரவாதி கூட நீ செய்கிற இந்த அடையாளத்தைச் செய்து விட முடியும்" என்றார். இப்படிச் சொல்லி அவர் இரண்டு நபர்களை அழைத்தார், ஒருவன் பெயர் யந்நே இன்னொருவன் பெயர் யம்பிரே, உண்மை யில் அவர்கள் நான் செய்த எல்லாவற்றையும் போலவே பாவனை செய்தார்கள். ஆனால் அது என்னைத் தடுத்து நிறுத்தவில்லை. ஏனென்றால், என்னை அனுப்பிய சத்தம் ஒரு வேதவாக்கிய சத்தமாக இருந்தது. நான் அதனுடன் நிலைத்திருந்தேன். அது தேவனுடைய வார்த்தையாக இருந்தது.

51. "அது ஒரு வேதவாக்கிய அடையாளமாகவும் ஒரு வேதவாக்கிய சத்தமாகவும் இருந்தது. ஏனென்றால், 'நான் என் வாக்குத்தத்தத்தை நினைவுகூர்ந்தேன், நேரம் சமீபமாய் இருக்கிறது'. இஸ்ரவேலருக்கு நூற்றுக்கணக்கான ஆண்டு களாக, நானூற்று நாற்பது வருடங்களாக எந்தத் தீர்க்க தரிசிகளும் இல்லாமல் இருக்கிறார்கள். ஆனால், அவர் அவர்களில் ஒருவனாக இருக்கும்படி நான் உன்னை அனுப்புகிறேன் என்றார். அவன் சென்றான். மேலும் ஒரு அடையாளமாக இருக்கும்படிக்கு நான் திரும்பி வந்து இஸ்ரவேல் ஜனங்களை இந்த மலையின் மீது கொண்டு வருவேன் என்றார். அதற்கு அதிக காலம் பிடித்தது,

ஆனால் நான் அதைச் செய்தேன். நான் வார்த்தைக்கு உண்மையாக நிலைத்திருந்தேன். மேலும் யந்நேயும், யம்பிரேயும் போன்ற அந்த மாம்சிகமான ஆள்மாறாட்டக் காரர்கள் அதைப் பரிகாசம் செய்ய முயற்சித்தபோது, இன்னுமாக அவர்கள் எவ்வளவு பரிகாசம் செய்தாலும், அது ஒரு காரியமில்லை என்று நான் உறுதியாக இருந்தேன்..."

52. கடைசி நாட்களில் அது மீண்டும் நடக்கும் என்று நீங்கள் அறிவீர்களா? இயேசுவே அப்படிக் கூறினார். "யந்நேயும், யம்பிரேயும் மோசேக்கு எதிர்த்து நின்றது போல, இந்த கடைசி நாட்களிலும் இவர்களும் எதிர்த்து நிற்பார்கள்" என்று வேதாகமம் கூறுகிறது. போலியாகப் பாவனை செய்பவர்களும், மற்றவர்களைப் போல நடந்து கொள்ள முயற்சிப்பவர்களும் இருப்பார்கள்.

53. ஆனால் நான் உறுதியாக நின்றேன். ஏனென்றால், நான் அந்த சத்தம் ஒரு வேதவாக்கிய சத்தம் என்று அறிந்திருந்தேன். அவர்களுக்கு இருவர் இருந்தார்கள்; ஆனால் அவனோ ஒருவனாக இருந்தான். ஆனால் அவன் கீழே சென்று அவர் செய்யச் சொன்னபடியே செய்தான். அது உண்மை என்று நிரூபிக்கப்பட்டது. அவன் தேவன் அவனுக்குச் சொன்ன மலைக்கு நேராக திரும்பி வந்தான்.

54. "கீழே இறங்குங்கள், மோசே. இன்னொரு சாட்சியை விரைவாக அழைப்போம். யோசுவா."

55. யோசுவா கூறுகிறார், "நாங்கள் தேசத்திற்கு அருகே வந்தபோது, நாங்கள் காதேஸ் பர்னேயா வரை வந்தோம். தேவனுடைய தாசனாகிய மோசே சென்று அனைவரையும் அழைத்தார், ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் ஒருவர், ஒவ்வொரு சபைப் பிரிவிலிருந்தும் ஒருவர். அவர் சொன்னார், "போய் தேசத்தை வேவு பார்ப்போம்" என்றும்,

நாங்கள் தொடர்ந்து சென்றோம், எங்களில் இரண்டு பேர் தேசம் நல்லது என்பதற்கான ஆதாரத்தை திரும்ப கொண்டு வந்தோம். அவர்கள் அதற்கான ஆதாரத்தை கொண்டிருந் தார்கள், அவர்கள் உண்மையான பெந்தெகொஸ்தேக் காரர்கள். எனவே அவர்கள் தேசம் நல்லது என்பதற்கான ஆதாரத்துடன் திரும்பி வந்தார்கள். ஆனால் முழு தேசத்தையும் சுதந்தரிக்க வந்தபோது அவர்கள் "எங்களால் அதைச் செய்ய முடியாது, எங்களால் அதைச் செய்ய முடியாது, நாம் திறமை இல்லாதவர்கள் என்றார்கள். அதனால், ஜனங்கள் என்ன செய்வது, எந்த ஸ்தாபனத்துக்கு செல்வது என்று தெரியாமல் உடைந்து போனார்கள். நான் அவர்களை அமைதிப்படுத்தி, "நினைவு கூறுங்கள், அது தேவனுடைய வாக்குத்தத்தம்! அந்த தேசத்தை நான் உங்களுக்குக் கொடுத்தேன் என்று தேவன் கூறினார், தேவன் என்ன வாக்குத்தத்தம் செய்கிறாரோ அதை அவர் நிறைவேற்றுவார்" என்றேன். அடுத்த நாள், நாம் புறப்படப் போகிறோமா? என்று ஜனங்கள் கேட்டார்கள். அடுத்த நாள் நாம் புறப்படப் போகிறோமா? என்று மீண்டும் கேட்டார்கள். அது நாற்பது வருடங்களுக்குப் பிறகு, ஆனால் நாங்கள் தேசத்தை கைப்பற்றினோம்.

56. இன்னும் ஒரு சாட்சி, நான் ஏசாயாவை சாட்சிக் கூண்டுக்கு அழைக்கட்டுமா? "ஏசாயா, நீங்கள் பிரதிவாதி தரப்பிற்காக, சாட்சி அளிப்பீர்களா? மேலும் எங்களுக்கு உங்கள் சாட்சியை கொடுப்பீர்களா?"

57. "நான் சொல்லுவேன். நான் ஒரு தீர்க்கதரிசியாக இருந்தேன். நான் ஒரு நிரூபிக்கப்பட்ட தீர்க்கதரிசியாக இருந்தேன். நான் என்ன கூறுகிறேனோ அது.... நான் என்ன கூறுகிறேன் என்று எனக்கே தெரியாது! ஆனால் நான் கூறினதை தேவன் நிறைவேறச் செய்தார். ஒவ்வொரு வரும் அதை விசுவாசிக்க ஆரம்பித்தனர். சபை முழுவதும் அவர்கள் விசுவாசிக்க ஆரம்பித்தனர். மேலும் ஒரு நாள்

ஒரு விநோதமான காரியம் சம்பவித்தது. கர்த்தராகிய தேவன் என்னிடத்தில் "இஸ்ரவேலர் அடையாளத்தை தேடுகிறார்கள். ஆகையால் அவர்கள் அதைச் செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிறேன், ஆனால் நான் அவர்களுக்கு ஒரு மேம்பட்ட அடையாளத்தை கொடுக்கப் போகிறேன்" என்றார். மேலும் அது ஒரு மேம்பட்ட காலத்துக்காக இருக்கப் போகிறது. அவர்கள் பெரிய வணிக வளாகங்களையும், சிறந்த ஜெட் விமானங்களையும், மற்றும் எல்லாமே சிறந்த, மேலான ஒன்றாய் அவர்கள் பெற்றிருக் கும் பொழுது, நான் அவர்களுக்கு ஒரு மேம்பட்ட அடையாளத்தை கொடுக்கப் போகிறேன். ஒரு கன்னிகை கர்ப்பவாதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்! என்று கூறினேன். நான் ஒரு நிரூபிக்கப்பட்ட தீர்க்கதரிசியாய் இருந்தபடியால், ஒவ்வொரு கன்னிப் பெண்ணும் தங்கள் குழந்தைக்கான காலுறைகளையும், மற்ற எல்லாவற்றையும் ஆயத்தப்படுத்தினார்கள். ஆம், ஐயா. அவள் தான் அந்த யேகோவாவால் அழைக்கபட்டவளாய் இருப்பாள். எல்லா காரியங்களும் கடந்து சென்றன. ஆம், ஐயா. 'நல்லது, இப்பொழுது நாங்கள் அவள், என்னுடைய மகள் கர்ப்பவதியாக வேண்டும்' என்று எதிர்பார்த்துக் கொண்டி ருக்கிறோம், 'நான் தான் அவள்' என்று ஒவ்வொரு பெண்ணும் அதற்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். வருடங்கள் கடந்தன அவர்களில் சிலர் தங்கள் தலையை சொரிந்து கொண்டு, 'அந்தக் கள்ள தீர்க்கதரிசியை என்ன செய்வது?' என்று சொல்லிக் கொண்டிருந்தனர். ஆனால் அதுவோ எண்ணூறு வருடங்களுக்குப் பிறகு நிறைவேறி யது. அந்த கன்னிகை எப்பொழுது கர்ப்பவதி ஆவாள் என்று அவர் சொல்லவில்லை. அவள் கர்ப்பவதி ஆவாள்! என்று மாத்திரமே சொன்னார். எண்ணூறு வருடங்களுக்குப் பிறகு ஒரு கன்னிகை கர்ப்பவதியானாள்."

58. இப்பொழுது கடைசி சாட்சியாக, நீங்கள் என்னை மன்னிப்பீர்களானால், நான் அந்த அடுத்த சாட்சியாக இருக்க முடியுமா? அது மீண்டும் வேதத்தில் இருந்தல்ல, அது இப்பொழுது நான் அந்தக் கடைசி சாட்சியாக இருக்கட்டும். சில நிமிடங்களுக்கு முன்பாக தான் நாம் ஜெப வரிசையை ஆரம்பித்தோம். மேலும் இப்பொழுது நன்றாகக் கூர்ந்து கவனியுங்கள். நான் அவருக்காக சாட்சி சொல்ல விரும்புகிறேன். நான் அந்த சாட்சிக் கூண்டில் ஏறி "நான் சொல்வதெல்லாம் உண்மை, உண்மையைத் தவிர வேறொன்றுமில்லை" என்று கூற விரும்புகிறேன்.

59. நான் எப்படி ஒரு கிறிஸ்தவனானேன் என்று சொல்ல விரும்புகிறேன். என் தந்தையும் தாயும், தாத்தாவும் பாட்டியும், இரு தரப்பினரும், அனைவரும் பாவிகளாக இருந்தார்கள். சுபாவத்தின் படி நான் ஒரு முட்செடியைப் போன்று இருந்தேன், நான் எப்படி ஒரு கோதுமை மணியாக மாற முடியும்? ஆனால் ஒரு காலை வேளையில் கெண்டக்கியிலிருக்கும் ஒரு சிறிய மரக்குடிலில் 1909-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6- ஆம் தேதி காலை 5 மணிக்கு கர்த்தராகிய தேவன் என்னை பூமிக்கு கொண்டு வந்த போது, "அங்கே இருந்த ஒரு சிறிய ஜன்னல் அருகே ஒரு ஒளி தொங்கிக் கொண்டிருந்தது" என்று என் தாயும் மருத்துவச்சியும் கூறினார்கள். வைக்கோல் படுக்கையில் படுத்துக் கொண்டிருந்த என் தாயார் தனக்குப் பிறந்திருக் கிற குழந்தை எப்படிப்பட்டது என்று பார்க்கும்படியாக ஜன்னலை திறந்த போது, ஒரு ஒளியானது சுழன்று கொண்டு ஜன்னல் வழியாக உள்ளே வந்தது. மலைப் பிரதேசத்து ஜனங்களாகிய அவர்களுக்கு அதைக் குறித்து என்ன நினைப்பது என்றே தெரியவில்லை. இதையெல் லாம் அறிய முடியாத அளவுக்கு நான் மிகவும் சிறிய வனாய் இருந்தேன்.

60. அதன் பிறகு, ஒரு எட்டு வயது சிறுவனாக, ஏழு அல்லது எட்டு வயது சிறுவனாக இருந்த போது, என் தகப்பனாருக்கு சொந்தமான ஒரு கள்ளச்சாராய வடிகலனுக் காக தண்ணீர் சுமந்து கொண்டு வந்து கொண்டிருந்தேன். செப்டம்பர் மாதத்தில் ஒரு வெதுவெதுப்பான பிற்பகலில் கீழே உட்கார்ந்து அழுது கொண்டிருந்தேன். ஏனென்றால், சிறுவர்களோடு சேர்ந்து கொண்டு மீன்பிடிக்கப் போக முடியவில்லை என்பதற்காக, காரணம் நான் தண்ணீர் மொள்ள வேண்டிய வேலை இருந்தது. அப்போது வீட்டிற்கு வரும் வழியில் பாதி தூரத்தில் ஒரு மரத்தி லிருந்து ஒரு சுழல்காற்று போன்ற ஒரு சத்தம் கேட்டது. இந்தியானாவில் செப்டம்பர் மாதத்தில் எப்படி இருக்கும் என்று உங்களுக்கெல்லாம் தெரியும், எல்லா இடத்திலும் ஒரே அமைதியாக மரங்களெல்லாம் மரித்துக் கொண்டும், எல்லாம் ஒரே நிசப்தமாக இருந்தது. ஆனால் இந்த சுழல் காற்று ஒரு புதரில் இருந்து வந்து, அதிலிருந்து ஒரு சத்தமும் கேட்டது, அது "ஒருபோதும் புகைபிடிக்காதே, மது அருந்தாதே, உன் சரீரத்தை எந்த வகையிலும் அசுத்தப் படுத்தவோ வேண்டாம். (பெண்களிடத்தில் உன் சரீரத்தை கெடுத்துக் கொள்ளாதே) இன்னும் அதுபோன்ற எந்த காரியத்திலும் ஈடுபடாதே. ஏனென்றால், நீ பெரியவனாகும்போது நீ செய்யும் படிக்கு உனக்கு ஒரு வேலை இருக்கிறது" என்றது. என் தாயார் எனக்கு நரம்பு தளர்ச்சி வந்து விட்டது என்று நினைத்து மருத்துவரை அழைத்தார்.

61. அதிலிருந்து ஒரு வாரத்திற்குப் பிறகு நான் ஒரு மயக்க நிலையில் இருந்தேன் என்று சொல்லலாம், அப்போது, ஒரு நகராட்சி பாலம் ஓஹையோ நதிக்கு குறுக்கே கட்டப்படுவதை கண்டேன். அதிலிருந்து பதினாறு மனிதர்கள் கீழே விழுந்து மரித்ததைக் கண்டேன். அதிலிருந்து இருபத்தி இரண்டு வருடங்கள் கழித்து, அந்த நகராட்சி பாலம் அதே இடத்தில் கட்டப்பட்டு, அதேபோல

அங்கே பதினாறு மனிதர்கள் அதிலிருந்து விழுந்து மரித்தார்கள்.

62. கிரீன்ஸ் மில் (Green's Mill) என்ற இடத்தில் ஒரு இரவு, இதெல்லாம் எதைப் பற்றியது என்று அறியாமல்... பிற்காலத்தில் நான் கர்த்தருக்கு சேவை செய்யும்படியாக ஒரு ஊழியக்காரன் ஆவேன் என்று தெரியாமல், கிரீன்ஸ் மில்லில் ஒரு இரவு ... என் போதகர்கள் நான் சம்பவிக்கப் போகும் காரியங்களை முன் கண்டு சொல்லுவதைப் பார்த்த அவர்கள், அது ஒரு பிசாசு என்று என்னிடம் கூறினார்கள். நானோ ஒரு கிறிஸ்தவனாக இருந்ததால், பிசாசுகளுடன் எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. இல்லவே இல்லை. எனவே, நான் மேலே ஏறிச்சென்று "கர்த்தாவே, இவ்வாறு வாழ என்னால் முடியாது, " என்று ஜெபித்தேன். நான் அங்கே உட்கார்ந்து ஒரு சிறிய இடத்தில் பின்னால் உள்ள ஒரு மீன்பிடிக்கும் இடத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தேன். மேலும் அங்கே ஒரு இரவில் கர்த்தர் அவர் மோசேயிடத்தில் பேசியது போலவே ஒரு மரத்திலிருந்து என்னோடு பேசினார். அதன் பிறகு இங்கே இருக்கிற கிரீன்ஸ் மில்லில் அங்கே ஒரு மனிதன் வந்தார், அவர் உள்ளே வந்து என்னிடத்தில் "அந்த மனிதர்களிடத்தில் போய் அதைக் கேட்க முயற்சிக் காதே. அவர்களை விட்டு வெளியே வந்து விடு, அது தேவனிடத்திலிருந்து வந்த ஒரு வரமாயிருக்கிறது, அது உலகத்தின் மக்களிடையே கொண்டு செல்லப்பட வேண்டி யதாயிருக்கிறது என்றும், மேலும் வேத வாக்கியங்களைக் கொண்டு என்னை அறிந்து கொள்ளும்படி செய்தார். வேத வசனத்தில் சொல்லப்பட்ட வாக்குத்தத்தங்கள் நிறைவேற வேண்டியதாய் இருக்கிறது, காலம் சமீபமாய் இருக்கிறது" என்று கூறினார்.

63. மேலும், நான் திரும்பிச் சென்று என் போதகரிடம் சொன்னேன், நான் போய் அவரிடம் சொன்னேன், அவர்

என்னைப் பார்த்து "பில்லி நீ என்ன சாப்பிட்டாய்?" என்று கேட்டார். "ஏதாவது சொப்பனம் கண்டாயா, ஏதாவது தீயக் கனவா?"என்று கேட்டார். ஆனால் என்னைப் பொறுத்த வரை அது மல்கியா 4. "நீ அதை எப்படி செய்யப் போகிறாய்?" என்று கேட்டார். அது லூக்கா 17:30 ஆக இருந்தது. அது வெளிப்படுத்தல் 10-ஆகவும் இருந்தது. அது கடைசி நாட்களுக்கென்று வாக்குத்தத்தம் பண்ணப் பட்ட எல்லா வேத வாக்கியங்களாகவும் இருந்தது. ஆனால் அது அங்கேயே செய்யப்படுவதை அப்பொழுது நான் காணவில்லை. அது எப்பொழுது சம்பவிக்கப்போகிறது என்று ஜனங்கள் ஐயுற்றனர். ஆனால் நானோ பொறுமையாய் இருந்தேன்.

64. ஒரு நாள் நதியண்டையில் நான் ஒரு ஐந்நூறு பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது, திடீரென்று நான் ஒரு சிறு பையனாக இருந்த பொழுது எனக்குக் காட்சியளித்த அதே ஒளி அங்கு வந்தது. நான் அதை தொடர்ந்து பார்த்துக் கொண்டு வருகிறேன் என்று ஜனங்களுக்கு சொல்லியிருந்தேன். அவர்கள் நான் சொப்பனம் கண்டு கொண்டிருக்கிறேன் என்றும், ஒரு விதமான மனப்பிரம்மை எனக்கு உண்டா யிருந்தது என்றும் சொன்னார்கள். ஆனால் 1933-ல், ஐயாயிரம் பேருக்கும் அதிகமானவர்களுக்கு முன்பாக பிற்பகலில் இரண்டு மணியளவில் வானத்திலிருந்து அந்த மேகம் இறங்கி வந்து இந்த வார்த்தைகளைப் பேசினது. "யோவான் ஸ்நானன் கிறிஸ்துவின் முதல் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டதுபோல உன்னுடைய ஊழியம் கிறிஸ்துவின் இரண்டாவது வருகைக்கு முன்னோடியாக இருக்கும்" என்றது. அதை ஆயிரக்கணக் கான ஜனங்கள் கேட்டனர், அதைக் குறித்து செய்தித் தாள்களும் சாட்சி பகர்கின்றன.

65. நான் சொல்ல விரும்புகிறேன், மேலும் முட்களால் ஆன வடுக்களும், ஆணிகளால் ஆன தழும்புகளும் இன்னும் அதுபோன்ற காரியங்களும் உள்ள ஒரு மனிதனுக்காக பார்த்துக் கொண்டிருக்கிற அந்தக் குருட்டு அரசு தரப்பு வழக்கறிஞருடைய கவனத்திற்கு இதை கொண்டு வர விரும்புகிறேன். அது அப்படிச் சொல்ல வில்லை, அப்படிப்பட்ட ஒரு வாக்குத்தத்தத்தை கொடுக்க வில்லை.

66. நாம் அதை இங்கே லுக்கா 17-ஆம் அதிகாரம் 30-ஆவது வசனத்தில் வாசிக்கிறோம். இயேசு, "சோதோமின் நாட்களில் நடந்து போல மனுஷகுமாரன் வெளிப்படும் நாட்களிலும் நடக்கும்" என்று கூறினார். அவர் வெளிப் படுத்தப்படுகிறபோது! நான் இன்னும் சில நிமிடங்கள் இதற்கு நேராக உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். இன்னும் சில நிமிடங்கள் என்னோடு கூட நீங்கள் பொறுத்துக் கொள்வீர்கள் என்றால், மிகுந்த பயபக்தியோடு இருங்கள்.

67. கவனியுங்கள், இயேசு மூன்று பெயர்களை கொண்டிருந்தார்; மனுஷகுமாரன், தாவீதின் குமாரன், தேவகுமாரன், அவருக்கு மூன்று நாமங்கள் இருந்தன. எல்லாம் ஒரே நபர் தான், ஆனால் மூன்று பெயர்களில். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி; என்பதைப் போலவே, அது எல்லாம் ஒரே தேவன்தான், மூன்று தன்மைகள்.

68. என்னைப் போலவே. என்னுடைய மனைவி என்னை கணவர் என்று அழைக்கிறாள். என்னுடைய பிள்ளைகளுக்கு கணவன் என்ற அந்த வார்த்தையோடு கூட அவர்களுக்கு எந்த சம்பந்தமும் இல்லை. நான் அவர்களுக்குத் தந்தை. என்னுடைய சிறிய பேரன் அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அவனுக்கு தந்தை என்கிற பெயரோடு கூட எந்த சம்பந்தமும் இல்லை, கணவன் என்ற

பெயரோடு எந்த சம்பந்தமும் இல்லை. அவன் என்னுடைய பேரப்பிள்ளை. ஆனால் இதெல்லாம் ஒரே நபர் தான்.

69. மேலும் நாம் கவனிக்கிறோம். இயேசு தன்னை மனுஷ குமாரனாக வெளிப்படுத்த முயற்சித்த பொழுது (இதை தவற விடாதீர்கள்) அவர் தன்னை வெளிப்படுத்தி, தன்னை "மனுஷகுமாரன்" என்று தொடர்ந்து அழைத்துக் கொண்ட பொழுது, இஸ்ரவேலர் குருடாக்கப்பட்டனர். மனுஷகுமாரன் என்றால் என்ன என்று அவர்களுக்குத் தெரியவில்லை. மேலும் அவர்கள் தாவீதின் குமாரன் என்று கூறினர், குருடனான பர்த்திமேயுவும் ஓடிச்சென்று(தாவீதின் குமாரனே) என்று அவரை அடையாளம் கண்டு கொண்ட பொழுது, தாவீது என்பதற்கு ராஜா என்று அர்த்தம். நினைவில் கொள்ளுங்கள், மனுஷகுமாரன், தாவீதின் குமாரன், தேவகுமாரன் (அவர்தான் கர்த்தர்). இந்த யூதன், தான் எதைக் கேட்டானோ அதைப் பெற்றுக் கொண்டான். ஏனென்றால், அவன் அவரை தாவீதின் குமாரன், அந்த ராஜா என்கிற பெயரில் அணுகினான். அவர் இரட்சகராக இல்லை. ஆனால் அவர் ராஜாவாக இருந்தார்.

70. ஆனால் அந்த கிரேக்க பெண்மணி அந்த சீரோபேனிக்கியா பெண்மணி தாவீதின் குமாரன் என்கிற அந்த நாமத்தில் அவரை அணுகிய போது அவர் தலையைக் கூட திரும்பிப் பார்க்கவில்லை. அவளுக்கு தாவீதின் குமாரன் என்கிற நாமத்தில் அவரோடு கூட எந்த உரிமைகோருதலும் இல்லை. அந்த சீரோபேனிக்கியா பெண்ணுக்கு அவர் தாவீதின் குமாரனாக இல்லை. ஆனால் அவள் அவரை நோக்கி "ஆண்டவரே" என்று கூப்பிட்ட பொழுது, அப்பொழுது அவர் திரும்பிப் பார்த்தார். அவர் ஆண்டவராக இருந்தார். பாருங்கள்? கர்த்தர், அவர் கர்த்தராக இருந்தார்! அவளுக்கு அவர் தாவீதின் குமாரனாக இல்லை.

71. இப்பொழுது, அவர் ஏன் மனுஷகுமாரனாக அடையாளம் காணப்படவில்லை? மனுஷகுமாரன் என்பது ஆவிக்குரிய வெளிப்பாடு. ஒரு தீர்க்கதரிசி. மனுஷகுமாரன் என்றால் "தீர்க்கதரிசி" என்று அர்த்தம்.

72. இப்பொழுது நீங்கள் உங்கள் வேதாகமத்தை எசேக்கியேல் 2-ஆம் அதிகாரம் 1-வது வசனத்திற்கு திருப்புவீர்களானால் எசேக்கியேல் ஒரு தீர்க்கதரிசியாக, அந்த நாளுக்கான தேவனுடைய வார்த்தையாக இருந்தான் என்பதை நீங்கள் கண்டு கொள்வீர்கள். யேகோவாவே அவனை மனுப்புத்திரன் என்று அழைத்தார். யேகோவா அவனை ஒரு மனிதன், மனுஷகுமாரன், என்று அழைத் தார். இயேசு தம்மை மனுஷகுமாரனாக வெளிப்படுத்தியது போலவே. அது என்னவாக இருந்தது? அந்த மணி நேரத்துக்கென்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வார்த்தை, அதே தேவன் மாம்சமாகி இருந்தார். அதே தேவன்! எசேக்கியேலின் காலத்தில் தேவன், இயேசுவின் காலத்தில் தேவன், மனுஷகுமாரன்! அவர் அந்த நாளில் அப்படி இல்லை...

73. அவர் மனுஷகுமாரனாக இருந்தார். ஏனென்றால், அவர் இஸ்ரவேலுக்கு தன்னை ஒரு தீர்க்கதரிசியாக வெளிப்படுத்த வந்திருந்தார். ஆனால் அவர்கள் அதை புறக்கணித்து விட்டனர். மேலும் அவர்கள் அவரை அந்த நாமத்தில், மனுஷகுமாரன் என்கிற நாமத்தில், ஒரு தீர்க்கதரிசி என்கிற நாமத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது தீர்க்கதரிசனமாயிருந்தது. ஏனென்றால், அது தேவனுடைய வார்த்தையின்படி இருந்தது. உபாகமம் 18: 15, "உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்க தரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்." அவர் வரும்பொழுது, அவர் தம்முடைய ஊழியத்தில் தம்மை ஒரு மனிதனாக அடையாளம் காட்டுவார்." ஒரு தேவகுமாரனாக அல்ல,

மனுஷகுமாரனாக. தேவன் ஒரு ஆவியாய் இருக்கிறார். மேலும் அவர் தான் என்னவாக இருப்பேன் என்று உரிமை கோரினாரோ, அதே மனுஷகுமாராக வெளிப்படுத்தினார், மேலும் அவர்கள் குருடாகிப் போய் அதை பார்க்கக் கூடாமல் போய்விட்டது.

74. ஆனால் இப்பொழுது புறஜாதிகளுக்கு அவர் தம்மை தேவகுமாரனாக அதாவது பரிசுத்த ஆவியாக வெளிப்படுத்துகிறார். இயேசு கூறினார், "சோதோமின் நாட்களில் நடந்தது போல!"

75. இந்தக் குருட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் இதைக் காண வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவர் எப்பொழுதும் வார்த்தையின் குருட்டு வியாக்கியானியாக இருக்கிறார். அவர் அதைக் குறித்த தன்னுடைய ஸ்தாபன யோசனைகளை எடுத்துக் கொண்டு, அதைக்குறித்து ஒன்றுமே அறியாதிருக்கிறார். அவர் வஞ்சிப்பதற்காக அதை செய்கிறார். ஏனென்றால், ஆதியில் அவர் வஞ்சிக்கிறவராகவே இருந்தார்.

76. இயேசு, "சோதோமின் நாட்களில் நடந்தது போல மனுஷகுமாரன் வெளிப்படும் நாட்களிலும் நடக்கும்" என்று கூறினார். சோதோமின் நாட்களில் குமாரன், (தேவனாயிருந்தவர்) மாம்சத்தில் வெளிப்பட்டார். அவர் ஒரு நாளில் மெல்கிசேதேக்கு என்று அழைக்கப்பட்டிருந்தார், அந்த பிதா. மெல்கிசேதேக்கு அப்பொழுது தகப்பனும் தாயும் இல்லாதவராகவும், நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவும் இல்லாதவராகவும் இருந்தார்; அவர் எப்பொழுதும் யாராக இருந்தாரோ அப்படியே இப்பொழுதும் இருக்கிறார். இயேசுவுக்கு தகப்பனும் தாயும் இருந்தனர்; ஆனால் இந்த மனிதருக்கு தகப்பனும் இல்லை தாயும் இல்லை. மேலும் அவர் ஆபிரகாமுக்கு ஒரு மனுஷகுமாரனின் வடிவில், அதாவது ஏலோகீம், யேகோவாவாகத் தோன்றினார். சபை காலங்கள் முழுவதும் சபையானது அவரை பரிசுத்த

ஆவியின் அபிஷேகம் என்ற பதத்தில் தொழுது கொண்டு வருகிறது. ஆனால் இயேசு இங்கே கூறியது, மல்கியா 4 மற்றும் மீதி உள்ள மற்ற எல்லா வேத வாக்கியங்களையும் உங்களுக்கு உண்மையாக்கிக் காண்பிக்கத்தக்கதாக, பாருங் கள், அதாவது கடைசி நாட்களில் அவர் வருவதற்கு முன்பு இந்த உலகத்தின் அமைப்பு சோதோமைப்போல இருக்கும், அப்பொழுது மனுஷகுமாரன் சோதோமின் நாட்களில் தன்னை மனுஷகுமாரனாக வெளிப்படுத்தினது போல, மனுஷகுமாரனாக அவர் தம்மை வெளிப்படுத்துவார்."

77. குருட்டு அரசு வழக்கறிஞரே, உம்மால் அதை காண முடியவில்லையா? அவருடைய வார்த்தைகள் சத்திய மாய் இருக்கின்றன. ஆணிகளின் தழும்புகளும் முட்களின் வடுக்களும் பற்றியது அல்ல.

78. அது தேவகுமாரன் தம்முடைய சபையில் மனுஷ குமாரனாக உருவெடுத்திருப்பது. அது மல்கியா 4 மற்றும் மீதியுள்ள வேத வாக்கியங்களையும் நிறைவேற்ற வேண்டி யதாயிருக்கிறது. இந்த நீதிமன்றத்தின் கவனத்திற்கு நான் இதைக் கொண்டுவர விரும்புகிறேன். இதை நன்றாக கவனியுங்கள் "மனுஷகுமாரன்!" பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியாகிய தேவன் என்பது போலவே; அது அதே தேவன், அதே தேவனின் மூன்று வெவ்வேறு தன்மைகளில். இப்பொழுது, அது தாவீதின் குமாரன்... மனுஷகுமாரனாக வெளிப்பட்டு அதன் பிறகு ஒரு தீர்க்கதரிசியாக. தாவீதின் குமாரன். அந்த ராஜா. மேலும் இப்பொழுது சபை காலங்களுக்கு தேவனுடைய குமாரன் தேவன் மனிதனாய் இல்லாததால், தேவன் ஒரு ஆவியாய் இருக்கிறார். மேலும் ஆவியின் குமாரன்தான் பரிசுத்த ஆவியாக இருக்கிறார். அதுதான் சபை காலத்துக்கு வெளிப்படுத்தப்படுகிறது. ஆனால் "இந்த கடைசி நாட்களில் மனுஷகுமாரன் வெளிப்படுவார்!" என்று இங்கே வாக்குபண்ணப்பட்டிருக்கிறது.

79. குருட்டு அரசு தரப்பு வழக்கறிஞரே, உமக்கு இது புரிகிறதா? மேலும் குருட்டு அரசு வழக்கறிஞரே நீர் இதை அறிய வேண்டும் என்று நான் விரும்புகிறேன், நாங்கள் அதை காண்கிறோம், நாங்கள் அதை விசுவாசிக்கிறோம், இந்த வார்த்தைகள் எங்களுக்கு முன்பாக நிறைவேறி இருக்கின்றன, அவை சத்தியமாய் இருக்கின்றன என்று நாங்கள் அறிந்திருக்கிறோம்.

80. யூதர்களுக்கு அவர் தாவீதின் குமாரனாக இருந்தார். கிரேக்கர்களுக்கு அவர் கர்த்தராக, நமக்கும் அவர் கர்த்தராக, புறஜாதிகளுக்கு அவர் கர்த்தராக இருக்கிறார். இந்த கடைசி நாட்களில் அவர் மனுஷகுமாரனாக திரும்பி வருவார். ஏனென்றால், ஜனங்களை மூல வார்த்தைக்கு (அந்த ஸ்தாபனங்களிலிருந்து) பிதாக்களின் விசுவாசத்துக்கு, மூல பெந்தெகொஸ்தேக்கு திருப்பத்தக்கதாக இந்த கடைசி நாட்களில் ஒரு தீர்க்கதரிசி எழும்புவார் என்று மல்கியா வாக்குத்தத்தம் செய்கிறது. அவர் அதை செய்தபோது, பரிசுத்த யோவான் 14: 12, "அவர் செய்த அதே கிரியை களை தானும் செய்வான்" என்கிற வார்த்தையையும், வெளிப்படுத்தல் 10 "முழு இரகசியமும் வெளிப்படும்" என்கிற காரியங்களையும் நிறைவேற்றும். இரகசியங்களை நீ எப்படி வெளிப்படுத்துவாய்? பாருங்கள் லூத்தர் எதை விட்டுச் சென்றார், பாருங்கள் வெஸ்லி எதை விட்டுச் சென்றார், பாருங்கள் பெந்தெகொஸ்தே எதை விட்டுச் சென்றது, இருதயத்தின் இரகசியங்களை வெளிப்படுத்துவது. அது ஒவ்வொரு காலத்திலும் வாழ்ந்த அதே தேவனை கொண்டு வருவது. அது தேவனுடைய வார்த்தையே மீண்டும் மனுஷகுமாரனாக தன்னை வெளிப்படுத்துவதே யன்றி வேறல்ல. நாங்கள் ஆணிகளின் வடுக்களுக்காக எதிர்பார்ப்பதில்லை, நாங்கள் வார்த்தை வெளிப்படுவதை தான் பார்க்கிறோம். கவனியுங்கள், தேவன் இந்த காரியங் களையெல்லாம் இப்பொழுது வாக்குத்தத்தம் செய்திருக் கிறார். அவர் கூறிய வண்ணமாகவே அதை செய்கிறார்.

இன்னும் அதிகமாக என்னால் சொல்லக்கூடும். ஆனால் காலதாமதமாவதால் நாம் அந்த பொருளை விட்டு விலகுகிறோம்.

81. திரு. அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்களே, ஆயிரக்கணக்கான சாட்சிகளை, இங்கே இந்த பிற்பகலில் என்னால் அழைக்க முடியும் என்பதை நீர் அறிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவர் சொன்ன காரியங்களை அவர் செய்திருக்கிறார், "அவர் தம்முடைய வார்த்தையை காத்துக் கொள்கிறார் என்பதற்கு நாங்கள் இங்கே சாட்சிகளாயிருக்கிறோம் என்பதை நீர் அறிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஒரு உண்மையான பரிசுத்த ஆவியின் கூட்டம் இருக்கிறது! ஒரு உண்மையான தேவனுடைய வல்லமை இருக்கிறது. வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள் அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்கிற ஒரு உண்மையான வாக்குத்தத்தம் இருக்கிறது. அதை நீர் அறிய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். சோதோமின் நாட்களில் நடந்தது போல, மனுஷகுமாரனின் நாட்களிலும் நடக்கும் என்று அவர் கூறினார் என்பதை நீர் அறிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

82. நான் ஒரு அந்நியன், ஆனால் நீங்கள் கவனிப்பீர் களானால், ஒரு மனித வடிவில் வந்த கர்த்தருடைய தூதன் தன்னுடைய முதுகை கூடாரத்து பக்கமாக திருப்பியவாறு உட்கார்ந்து கொண்டு, கூடாரத்துக்குள் சாராள் தன் மனதில் என்ன நினைத்துக் கொண்டிருந்தாள் என்பதை ஆபிரகா மிடத்தில் வெளிப்படுத்தினார். அது மறுபடியும் செய்யப் படும் என்று இயேசு கூறினார். இப்பொழுது நான் உங்களுக்கு சத்தியத்தை சொல்லி இருப்பேன் என்றால், அது சத்தியம் என்பதை தேவன் உறுதிப்படுத்துவாராக. அவர் அதை வெளிப்படுத்துவாராக. அதன் பிறகு, அது இனிமேல் இரகசியம் அல்ல. அதன் பிறகு நாம் அதை

அறிந்து கொள்கிறோம். இந்த வார்த்தைகளை உங்கள் மனதில் பதியச் செய்துவிட்டு நான் இந்த பிற்பகலில் இந்த நீதிமன்றத்தை விட்டு வெளியேறுகிறேன். வாக்குத்தத்தம் செய்த தேவன் அந்த நாட்களில் அவற்றை வெளிப்படுத் தினார், அதுமட்டுல்ல இன்றைக்கு அந்த காரியங்களை வெளிப்படுத்துவாராக, அதையே சொல்வாராக. உங்களில் சிலர் உங்கள் இருதயத்தில் உங்களுடைய வியாதிக்காக அல்லது உங்களுடைய வருத்தத்துக்காக தேவனிடத்தில் ஜெபியுங்கள், ஜெபித்து தேவன் இருதயத்தின் இரகசியத்தை வெளிப்படுத்துகிறாரா இல்லையா என்பதை பாருங்கள். நீங்கள் அதைச் செய்யும் படியாக நான் உங்களுக்கு சவால் விடுகிறேன். ஒரு பக்கத்திலிருந்து அடுத்த பக்கம் வரைக்கும். இப்பொழுது, வேதவாக்கியம் சரியாக என்ன சொல்கிறதோ அதன் பேரில் நான் நிற்கவில்லை என்றால், அதை நான் துணிச்சலாக சொல்ல முடியுமா? அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராய் இருக்கிறார் என்பதையும், அவர் தம்முடைய வாக்குத்தத்தத்தை காத்துக் கொள்ளுகிறார் என்றும் இந்த நீதிமன்றம் காண வேண்டு மென்று நான் விரும்புகிறேன். மேலும் இயேசு கிறிஸ்து இந்த கடைசி நாட்களில் மனுஷகுமாரனாக வெளிப்படுவார் என்றும் அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். [ஒலிநாடா வில் காலியிடம் - ஆசி.]

83. மூல நோயினால் அவதியுற்றுக் கொண்டு ஒரு மனிதன் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார். நான் உங்களை என் ஜீவியத்தில் கண்டதே இல்லை, அது சரியானால், உம்முடைய கையை உயர்த்தும். தேவனுடைய வார்த்தையை குறித்து சாட்சி சொல்ல நீர் என்னை நம்புகிறீரா? அங்கே உமக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருப்பது அது உம்முடைய மனைவி. அவளும் கூட தலையில் கட்டியோடு கூட அவதியுற்றுக் கொண்டிருக்கிறாள். அது சரி, உங்கள் கையை உயர்த்துங்கள். நீங்கள் யாரென்று தேவனால் எனக்கு சொல்ல முடியும் என்று நீ விசுவாசிக்

கிறாயா? அவர் இன்னும் வார்த்தையாக இருப்பார் என்றால், வார்த்தை இருதயத்தின் இரகசியத்தை அறிகிறவராய் இருக்கிறார். நீங்கள் திரு. மற்றும் திருமதி. ஹண்ட். அது சரி என்றால், உம்முடைய கையை உயர்த்தும். நீங்கள் ஏன் அதை விசுவாசிக்கக் கூடாது?

[ஒரு சகோதரி அந்நிய பாஷையில் பேச ஆரம்பிக்கிறாள். ஒலிநாடாவில் காலியிடம் ஆசி.]

84. இங்கே, சரியாக ஒரு மனிதன் உட்கார்ந்து கொண்டு, தலை கவிழ்ந்து அழுது கொண்டு, தனக்காகவும் தன் மனைவிக்காகவும் கூட ஜெபித்துக் கொண்டிருக்கிறார். அவள் இங்கு இல்லை. இந்த பிற்பகலில் அவள் உம்மோடு இல்லை. அவள் வேதனைபட்டுக் கொண்டிருக்கிறாள். அவளுடைய தொல்லை என்னவென்று தேவனால் என்னிடம் சொல்ல முடியும் என்று நீர் நினைக்கிறீர், அவள் இங்கு இல்லை. நீர் அதை விசுவாசிக்கிறீரா? நீர் அதை செய்வீரா? நான் உமக்கு ஒரு அந்நியன், அது சரியா? உம்முடைய மனைவிக்கு பெண்களுக்கான தொல்லை இருக்கிறது. அது சரி என்றால், உம்முடைய கையை உயர்த்தும். நன்றாக உயரமாக உயர்த்தும், அப்பொழுது அவர்கள் எல்லாரும் காணட்டும். மேலும் உம்முடைய பெயர் திரு. ஸ்மித். தேவன் அவளை சுகமாக்குவார் என்று நீர் விசுவாசிக்கிறீரா? அது சரி என்றால், உம்முடைய கையை மேலும் கீழுமாக, இதுபோன்று அசைத்துக் காட்டும்.

மணவாட்டியின் சரீரத்தின் மூலமாக இயேசு கிறிஸ்து மனுஷகுமாரனின் சாயலில், மாம்சத்தில் வெளிப்பட்டிருக் கிறார் என்பதை நீர் விசுவாசிக்கும்படி நான் உமக்கு சவால் விடுகிறேன். அவருடைய அழைப்பை ஏற்றுக்கொள்ளும்.

85. இங்கே ஒரு பெண் உட்கார்ந்து கொண்டு என்னை பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவள் உயர் இரத்த அழுத்தத்தினால் அவதியுற்றுக் கொண்டிருக்கிறாள். நீ யார்

என்பதை தேவனால் என்னிடத்தில் சொல்ல முடியும் என்று நீ விசுவாசிக்கிறாயா? அவர்கள் உன்னை டெய்ஸி என்று அழைக்கிறார்கள். அது நீ தானே? அது சரியா? அப்படி என்றால் உன் கையை உயர்த்து. இப்பொழுது இயேசு கிறிஸ்து உன்னை சுகமாக்கி, உன்னுடைய வாஞ்சையை உனக்குத் தருவார் என்பதை உன் முழு இருதயத்தோடும் விசுவாசி. பாருங்கள், அவர் நேற்றும், இன்றும், என்றும், மாறாதவராய் இருக்கிறார். நீ அதை விசுவாசிக்கிறாயா?

86. இங்கே ஒரு மனிதன் சரியாக பின்னால் உட்கார்ந்து கொண்டு என்னை நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவருடைய இருதயத்தில் அவருக்கு ஒரு பாரம் உண்டு. அது அவருடைய மகனுக்கானது. அவருடைய மகனுக்கு சர்க்கரை வியாதி இருக்கிறது. நீர் விசுவாசிக்கிறீரா? அங்கே உமக்கு பக்கத்தில் இருந்து கொண்டு தேம்பி அழும் அந்தப் பெண்மணி உம்முடைய மனைவி, அவளுடைய இருதயத்திலும் ஒரு பாரம் இருக்கிறது. அது அவளுடைய சகோதரியை குறித்தது. அவளுடைய சகோதரிக்கு இருதய கோளாறு, சிக்கல்கள் இருக்கின்றன. நீங்கள் திரு. மற்றும் திருமதி. சிக்கிள்ஸ். அது சரி என்றால், உங்கள் கரங்களை இப்படி மேலும் கீழுமாக அசைத்து காட்டுங்கள். நான் உங்களுக்கு முழுவதும் அந்நியனாயிருந்தால், எழுந்து காலூன்றி நில்லுங்கள். நான் உங்களுக்கு அந்நியனாகவும், எனக்கு உங்களைத் தெரியாது என்றால், எழுந்து நில்லுங்கள்.

87. அது என்னவாயிருக்கிறது? கடைசி நாட்களில் தேவனுடைய வார்த்தையின் நிறைவேறுதலாக இருக்கிறது! அரசு வழக்கறிஞரே, தேவனுடைய வார்த்தை உண்மை யாயிருக்கிறது என்று நீர் விசுவாசிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். 33 வருடங்களுக்கு முன்பாக தேவன் என்னிடத்தில் சொன்னார், நான் இவ்வளவு காலமாக காத்திருந்திருக்கிறேன். ஆனால் அது சரியாக இந்த

பிற்பகலில் நிறைவேறியது. தேவன் தம்முடைய வார்த்தையை காத்துக் கொள்கிறார்! அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. போய் உங்கள் இருதயத்தின் வாஞ்சையை இப்பொழுது பெற்றுக் கொள்ளுங்கள்.

88. உங்கள் மனது தான் உங்களுடைய நீதிபதி. அந்த நீதிபதி தன்னுடைய மனதில் தீர்மானிக்க வேண்டும். மேலும் இப்பொழுதிலிருந்து நீங்கள் கிரியை செய்யப் போகிற விதம், தீர்ப்பின் விவரம் மக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும் அல்லது காண்பிக்கப்பட வேண்டும். அவர் குற்றவாளியா அல்லது குற்றமற்றவரா? அவர் குற்றமற்றவர் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அதாவது அவர் தம்முடைய வார்த்தையை காத்துக் கொள்கிறார் என்று. பிரச்சனை நம்மிடத்தில் தான் இருக்கிறது. நாம் தான் அந்தப் பழைய மனிதனாகிய பொறுமையற்றவருக்கு, திரு. அவிசுவாசிக்கு, திரு. சந்தேகவாதிக்கு செவி கொடுக்கிறோம். ஆனால் இப்பொழுது நீங்கள் தேவன் தம்முடைய வார்த்தையை காத்துக் கொள்கிறார் என்று விசுவாசியுங்கள். உங்கள் மனது தான் நீதிபதி. இனிமேல் நீங்கள் நடந்து கொள்ளப் போகிற விதம், ஜனங்களுக்கு உங்களுடைய தீர்ப்பு என்னவாய் இருக்கிறது என்பதை நிரூபித்து காட்டப் போகிறது. நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? அப்படி என்றால் நாம் நம்முடைய தலைகளை தாழ்த்துவோம்.

89. நான் உங்களிடம் நேர்மையான சத்தியத்தை சொல்லியிருக்கிறேன். இங்கே தங்குவதற்கு நமக்கு நேரம் இருக்கும் என்றால், இதே சாட்சியை சொல்லாத ஒரு வேத வசனம் கூட வேதத்தில் இல்லை என்பதை நிரூபிக்க முடியும். நான் நேர்மையாக இருந்திருக்கிறேன். சில நேரங்களில் நேர்மையாக இருப்பது என்பது ஒரு எளிதான வழி அல்ல என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் தேவன் அங்கே இருக்கிற வரைக்கும்! ...லூத்தருக்கு அது

எளிமையாக இல்லை, வெஸ்லிக்கு, அல்லது மீதியுள்ள மற்றவர்களுக்கு அது எளிமையாக இல்லை. உங்களுக்கும் அல்லது தீர்மானத்தை எடுக்கப் போகிற எவருக்குமே அது அவ்வளவு எளிதாக இருக்கப்போவதில்லை. ஆனால் இந்த பிற்பகலில் நீங்கள் உங்கள் தீர்மானத்தை எடுத்துதான் ஆக வேண்டும். அவர் ஒருபோதும் சொல்லவில்லை... அவர் "வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள் அப் பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்" என்றார். நீங்கள் அதை விசுவாசித்தால். அதன் பிறகு அது இப்பொழுது சம்பவிக்கிறதோ, அடுத்தவாரம் சம்பவிக்கிறதோ, இன்றி லிருந்து இருபது வருடங்களுக்குப் பிறகு சம்பவிக்கப் போகிறதோ அதைக் குறித்து எனக்கு கவலை இல்லை; நீங்கள் அதை முற்றிலுமாக விசுவாசித்திருந்தால் அது சம்பவித்தாக வேண்டும். நான் ...

90. நான் நினைக்கிறேன் ஒரு மருத்துவர் இப்பொழுது இங்கே வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறார். நான் அவருக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன். சற்று நேரத்துக்கு முன்பாக, நான் ஒரு நோயாளியிடம் சென்றிருந்தேன், இன்று காலையில் ஒரு மருத்துவமனையில் மரிக்கும் தருவாயில் இருந்த (அப்படித்தான் அவர்கள் நினைக் கிறார்கள்) அவருடைய நோயாளியை பார்க்கும் படியாக சென்றிருந்தேன். அவள் முழுவதும் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டிருந்தாள். மேலும் அந்த சிறிய பெண்மணி என்னிடம் சொன்னாள், "என்னுடைய மருத்துவர் உங்களுடைய கூட்டங்களில் கலந்து கொண்டார், அவர் உங்களுடன் உடன்படுகிறார். மேலும் அது மாத்திரமல்ல, சகோதரன் பிரான்ஹாம் அவர் எனக்காக ஜெப வரிசையில் உங்களுடன் நிற்கிறார். அங்கே எனக்கு ஏதாவது மருத்துவ உதவிகள் தேவைப்பட்டால் அவர் எனக்கு செய்ய வேண்டும் என்று நான் விரும்பினேன்." அந்த விதமாக தேவனை விசுவாசிக்கக்கூடிய ஒரு மனிதன்! ஆம்.

அவர்கள் வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளிலும், எல்லா விதமான தொழில்களிலும் இருக்கிறார்கள்.

இப்பொழுது தீர்ப்பின் விவரம் உங்களுடையது என்பதை, நாம் நினைவு கூறுவோம்.

91. கர்த்தராகிய இயேசுவே, நான் வெறுமனே வார்த்தையை விளக்கிச் சொல்ல முயற்சித்திருக்கிறேன். அது சத்தியமாய் இருக்கிறது என்று நீர் சாட்சி பகிர்ந்திருக்கிறீர். உம்முடைய சாட்சிகளை நூற்றுக்கணக்கில் நாங்கள் அழைத்திருக்க முடியும், ஆனாலும் எங்களுக்கு நேரமில்லை. இங்கே கூட கைக்குட்டைகள் வைக்கப்பட்டிருக்கின்றன, அது, இயேசு இன்னும் ஜீவிக்கிறார் என்று பரிசுத்த ஆவியானவர் சரியாக சாட்சி பகருகிற இந்த இடத்திலிருந்து வியாதியஸ்தர்களுக்கும், வேதனையுறுகிறவர்களுக்கும் போகிறது. அவருடைய ஜீவனைக் கொண்டு நாங்கள் அவரை அறிந்து கொள்கிறோம். அவர் ஜீவித்த ஜீவியம் மற்றும் அவர் செய்த கிரியைகள். மேலும் நாங்கள் இந்த கைக்குட்டைகளின் மீது எங்கள் கைகளை வைத்திருக்கையில், தேவனே இந்த கைக்குட்டைகளை யாரெல்லாம் தொடுகிறார்களோ அவர்களெல்லாம் சுகமாக வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம். விசுவாசத்தோடு கூட இங்கு இருக்கும் மற்ற சகோதரர்களோடும், விசுவாசிகளோடும் சேர்ந்து இங்கு வர முடியாத அந்த மக்களுக்காக நான் என் ஜெபத்தை ஏறெடுக்கிறேன். அவர்கள் தாமே தேவனுடைய மகத்துவங்களை அனுபவிப்பார்களாக. அவர்கள் ஒருவேளை வியாதியஸ்தர்களாக இருந்து இங்கே வர முடியாமல் இருந்திருக்கலாம், சிலர் ஏழைகளாய் இருந்து வயதான தகப்பனார் அங்கே வீட்டின் ஒரு அறையில் உட்கார்ந்து கொண்டு ஒரு சிறிய பிரம்புத் தடியை தட்டிக் கொண்டு, இந்த பிற்பகலிலே இந்த கைக்குட்டை வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டு காத்துக் கொண்டிருக்கலாம். அந்த குழந்தை மருத்துவமனையில்

படுத்துக் கொண்டு காய்ச்சலினால் உடல் எரிச்சலோடு கூட படுத்துக் கொண்டு, யாராகிலும் இந்த கைக்குட்டையை கொண்டு வரமாட்டார்களா என்று எதிர்பார்த்துக் கொண்டி ருக்கலாம். சர்வ வல்லமையுள்ள தேவனுடைய வல்லமை அவற்றோடு கூட சென்று, இந்த பிற்பகலில் இந்த கூட்டத் தில் காணப்பட்ட அதே வல்லமையான அபிஷேகம் அவர்களையும் அபிஷேகிப்பதாக, கர்த்தாவே, அவர்கள் தாமே சுகம் அடைவார்களாக. அவர்களால் இங்கு வர முடியாத காரணத்தால், அவர்கள் சார்பாக நாங்கள் இந்த ஜெபத்தை ஏறெடுக்கிறோம். ஆனால் நீர் சர்வ வியாபியா யிருக்கிறீர். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உம்முடைய வார்த்தையை உறுதிப்படுத்த நீர்தாமே அங்கே இருப்பீராக.

92. இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் தாமே உண்மையாக, உணர்ச்சிவசப்பட்டு அல்ல, அல்லது ஏதோ ஒரு விதமான அரைகுறை நம்பிக்கையோடு அல்ல. ஆனால் இந்த பிற்பகலில் நான் "நீதிமன்றம்" என்று அழைத்த இந்த மக்கள் அவர்கள் ஒரு உண்மையான தீர்ப்பை சொல்லட்டும். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய ஜெப அட்டைகளை தங்கள் கைகளில் பிடித்துக் கொண்டு இந்த மேடையின் பக்கம் கடந்து வரும் பொழுது அதே சாட்சியை கொடுக்கட்டும். பரிசுத்த மாற்கு சுவிசேஷம் 16-ஆம் அதிகாரத்தின் படி "வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள் அப்பொழுது, அவர்கள் சொஸ்தமாவார்கள்." என்று வார்த்தை அவர்களுக்கு பிரசங்கிக்கப்பட்டிருக்கையில், உம்முடைய தெரிந்து கொள்ளப்பட்ட ஊழியக்காரன் இங்கே நின்று கொண்டு நாங்கள் எங்கள் கைகளை அவர்கள் மேல் வைக்கும் பொழுது, கர்த்தாவே, அது அவர்களுக்கு என்றென்றைக் குமான தீர்வாக இருப்பதாக. அவர்கள் தங்களுக்கு எப்போதாவது, ஏதாவது, பிரச்சனைகள் இருந்ததா என்பதை மறந்துவிட்டவர்களாக இங்கிருந்து சந்தோஷத்தோடு கடந்து செல்வார்களாக. ஏனென்றால், அவர்கள் ஆபிரகாமைப்

போல 'வாக்குத்தத்தம் செய்தவர் அதை நிறைவேற்ற வல்லவராக இருக்கிறார்' என்கிற நிச்சயம் உடையவர்களாக இருக்கிறார்கள். இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

நான் அவரை நேசிக்கிறேன், நான் அவரை நேசிக்கிறேன்

ஏனெனில், முந்தி அவர் என்னை நேசித்தார்

என் இரட்சிப்பை சம்பாதித்தார்

கல்வாரி மரத்தில்.

93. எத்தனை பேர் உங்களுடைய தீர்ப்பின் விவரத்தை வைத்திருக்கிறீர்கள்? உங்கள் கைகளை உயர்த்துங்கள், "நான் என்னுடைய தீர்ப்பின் விவரத்தை வைத்திருக் கிறேன்." அது சரி, நீதிமன்றமே, தேவனுடைய பரிசுத்த வார்த்தையின்படியே உங்களுக்கு பதில் அளிக்கப்படும். "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன. "இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிற உங்களை, என்னிடத்தில் இந்த வரம் இருக்கிறபடியால் இந்த வரம் ஒருவரை மற்ற எல்லாரைக் காட்டிலும் ஏதோ ஒருவராக ஆக்குகிறது என்று நினைத்துக் கொண்டிருக்கும்படி செய்துவிட்டு அப்படியே விட்டுவிட்டு நான் போக மாட்டேன். உங்களுக்கு நல்ல தேவபக்தி உள்ள போதகர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் இங்கே இருக்கிறார்கள், அவர்களையும் என்னோடு கூட இந்த மேடையில் நிற்கும் படியாக நாங்கள் கேட்கப் போகிறோம், நான் செய்வது போலவே அவர்களும் உங்கள் மேல் கைகளை வைப்பார்கள். அவர்கள் தான் எங்களை இங்கே வரவழைத்தார்கள். மேலும் அவர்கள் உங்களுக்கு தேவனுடைய சாட்சிகளாய் இருக்கிறார்கள். சத்தியத்துக்கு அவர்கள் சாட்சி பகர்கிறார்கள். இப்பொழுது, சகோதரன் பிரான்ஹாம் கைகளை வைத்தார் என்று யாரும் சொல்ல முடியாது ஏனென்றால், என்னுடைய கைகள் அவர்

களுடைய கைகளைக் காட்டிலுமோ அல்லது வேறு எவருடைய கைகளைக் காட்டிலுமோ அவ்வளவு சிறந்தது அல்ல. உங்களுடைய விசுவாசம் தான், உங்களுடைய தீர்ப்பின் விவரம் தான் தேவனுடைய வார்த்தையை நிறைவேறச் செய்கிறது. தேவன்... மேலும் அந்த வேத வார்த்தையின் பாகத்தை காத்துக் கொண்டு அதை உங்களுக்கு நிரூபிப்பாரென்றால், அப்பொழுது நீங்கள் ஏற்கனவே சுகமாகி விட்டீர்கள். ஏனென்றால், அவருடைய தழும்புகளால் நீங்கள் சுகமானீர்கள்.

94. இப்பொழுது, இந்தப் பக்கத்தில் இங்கே ஜெப அட்டையை வைத்திருப்பவர்கள் எல்லாரும் எழுந்து சுவரின் அந்த பக்கமாக போய் நிற்கும்படியாய் நான் விரும்புகிறேன். இப்பொழுது, அந்தப் பக்கத்தில் ஜெப அட்டைகளை வைத்திருப்பவர்கள் எல்லாரும் இருக்கை களுக்கு நடுவில் வந்து அந்தப் பக்கம் பார்த்தவாறு நிற்க வேண்டுமென்று விரும்புகிறேன்.மேலும் ஜெப அட்டையை வைத்திருக்கிற இந்த பக்கத்தில் இருக்கிறவர்கள் இப்பொழுது அந்த பக்கம், இங்கே இப்பொழுது அந்த பக்கமாக திரும்பி வந்து இந்த பக்கமாக செல்லுங்கள். அந்த பக்கம் திரும்பிச் செல்லுங்கள். ஏனென்றால், எனக்கு ஒரு நேர் வரிசையை உண்டாக்க வேண்டும். இந்த பக்கத்தில் இருக்கிறவர்கள் எல்லாரும், இந்த பக்கம் வந்து அந்த பக்கமாக பார்த்து நில்லுங்கள். மேலும் இந்த பக்கத்தில் இருக்கிறவர்கள் அங்கே அதுவரைக்கும் ஜெப அட்டையை வைத்திருப்பவர்கள் இந்த பக்கம் வாருங்கள், வந்து அந்த பக்கம் பார்த்து நில்லுங்கள். அந்த ஜெப வரிசை மேலும் தொடர்ந்து சென்று கொண்டிருக்கும். பலகணியில் இருக்கிறவர்கள் எல்லாரும் ஜெப அட்டையை வைத்திருப்பவர்கள், ஜெபித்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறவர்கள் அப்படியே நேராக இந்த பக்கமாக, பின்பக்கமாக இறங்கி வந்து அடுத்த பக்கமாக அவர்கள்

வரும்பொழுது அப்படியே நீங்கள் கடந்து செல்லுங்கள் நான் ...

95. [சகோதரன் பிரான்ஹாம் மேடையில் உள்ள ஊழியக்காரர்களுடன் பேசுகிறார் - ஆசி] நான் மற்ற ஊழியக்காரர்களையும் கூப்பிட வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா? சாட்சிகள் சொல்ல வேண்டுமா? பரவா யில்லை, எல்லாம், உங்கள் எல்லோருக்கும் அது பரவா யில்லையா? இந்த வழக்கில் உம்முடைய தீர்ப்பின் விவரம் என்ன? [அந்த சகோதரன் பதிலளிக்கிறார், "அந்த காரியங் களெல்லாம் உண்மை என்று நான் அறிந்திருக்கிறேன்] நல்லது.

96. போதகர்கள் மற்ற போதகர்களுடனான ஐக்கியத்தை குறித்து தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள். அவர்கள் இங்கு இருக்கிற வேறு ஊழியக்காரர்கள் யாராகிலும் தேவனை விசுவாசிக்கிறவர்கள் இருந்தால், வியாதியஸ் தர்கள் மேல் கைகளை வைப்பதில் விசுவாசம் உடைய வர்கள், உங்களுடைய தீர்ப்பின் விவரம், "அது சரிதான், அது உண்மை" என்று சொல்லுகிறவர்கள் இருந்தால், அவர்களையும் தங்களோடு சேர்ந்து ஜனங்களுக்கு ஜெபிக்கும்படியாக மேடையின் மீது வரும்படி விரும்பு கிறார்கள். தேவ ஆவியினால் நிரப்பப் பட்ட எல்லா போதகர்களும், உங்களுடைய தீர்ப்பின் விவரம் "அவர் நேற்றும், இன்றும், என்றும், மாறாதவராய் இருக்கிறார்" என்ற விசுவாசமாகவும், மாற்கு 16 அது சத்தியம் என்றும் விசுவாசிக்கிறவர்கள் இருந்தால், இந்த போதகர்கள் சுவிசேஷத்தில் உடன் பணியாளர்களாக உங்களையும் தங்களோடு சேர்ந்து ஜெபிக்கும்படியாக அழைக்க விரும்புகிறார்கள். நீங்கள் இங்கே வந்து எங்களோடு கூட இந்த ஜெப வரிசையில் வருபவர்களுக்கு ஜெபிக்கும் படியாக மேடையின் மீது ஏறிவரலாம். அவர்களை இந்த பக்கமாக கொண்டு வாருங்கள். இந்த கட்டிடத்தில் இருக்கிற

எல்லா போதகர்களையும் அவர்கள் எந்த ஸ்தாபனத்தை சார்ந்தவர்களாக இருந்தாலும் பரவாயில்லை, அப்படித்தான் அவர்கள் கேட்கும் படியாக என்னிடத்தில் சொன்னார்கள், வாருங்கள் இப்பொழுது வர விரும்புகிறவர்கள் நீங்கள் எல்லாரும் வரலாம். ஜெப வரிசையில் ஜெபிக்க வேண்டிய வர்கள் வரலாம். வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கப் போகிறோம். அவர்கள் மேல் கைகளை வைக்க நீங்கள் விரும்பினால் இப்போது வாருங்கள்.

97. இங்கே இருக்கிற எத்தனை பேர் வியாதியில்லாமல் நன்றாக இருக்கிறவர்கள்? இப்பொழுது உங்களுக்கு ஜெபம் அவசியமில்லை என்றால், ஆனால் நீங்கள் விசுவாசிகள் என்றால், உங்கள் கைகளை உயர்த்துங்கள். இங்கே போதகர் களாகிய நாங்கள் இந்த மக்களுக்காக ஜெபிக்கும் பொழுது நீங்களும் கூட எங்களோடு சேர்ந்து உங்களுடைய ஜெபத்தை ஏறெடுப்பீர்கள் என்று வாக்கு கொடுப்பீர்களா? இங்கே நிற்பவர்கள் ஒருவேளை உங்களுடைய தாயாராக இருந்தால் எப்படி இருக்கும்! ஒருவேளை அது உங்களுடைய மனைவியாக இருந்தால்! ஒருவேளை அது உங்களுடைய சகோதரனாக அல்லது சகோதரியாக இருந் தால் எப்படி இருக்கும்! ஆனால் அது யாரோ ஒருவரு டைய தாயார், அது யாரோ ஒருவருடைய சகோதரன், யாரோ ஒருவருடைய சகோதரி, அது ஒரு தாயினுடைய மகன் அல்லது மகள் அல்லது அது வேறு ஒருவருடையது என்பதை நினைவு கூறுங்கள். மேலும் நாம் எல்லாரும் மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறோமோ அதையே நாமும் மற்றவர் களுக்கு செய்ய வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் ஜெபத்தில் பயபக்தியாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

98. மேலும் அவர்கள் இப்போது தங்கள் வரிசைகளை ஆயத்தமாக்கிக் கொண்டிருக்கும்போது, ஊழியர்கள் இங்கே

வந்து மேடையின் பக்கத்தைச் சுற்றி இரட்டை வரிசையை அமைக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அப்பொழுது, ஜனங்கள் வெளியே போகவும் வரவும் முடியும். நான் ஒலிபெருக்கியை இங்கேயே வைத்து விடுகிறேன். திரு. பார்டர்ஸ் இங்கே நின்று கொண்டு பாடலை நடத்திக் கொண்டிருப்பார். அது சரி இரட்டை வரிசை மேலும் கீழுமாக இந்த பக்கத்திலும் அந்தப் பக்கத்திலும். அப்பொழுது, ஜனங்கள் ஒரு பக்கம் வரவும் இன்னொரு பக்கம் போகவும் முடியும்.

99. இப்பொழுது, வரிசையில் நின்று கொண்டிருக்கும் நீங்கள் ஒவ்வொருவரும் சாத்தானாகிய அந்த அரசு வழக்கறிஞருக்கு உங்கள் தீர்மானம் எடுக்கப்பட்டு விட்டது என்றும், உங்களுடைய தீர்ப்பின் விவரம் எழுதப்பட்டு விட்டது என்றும், அதாவது நீங்கள் மாற்கு 16-ஐ விசுவாசிக்கிறீர்கள். மேலும் அது சத்தியமாக இருக்கிறது. அதன் அடிப்படையில் தான் உங்கள் மேல் கைகளை வைத்து ஜெபிப்பதற்காக நீங்கள் இந்த வரிசையில் வந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை இருமடங்கு உறுதிப்படுத்து வதற்கும், மேலும் இந்நேரம் முதற்கொண்டு உங்களுடைய தீர்ப்பு என்னவாய் இருக்கிறது என்பதை உங்களுடைய செய்கைகள் நிரூபிக்கப் போகின்றன. வரிசையில் இருக்கிற நீங்கள் யாவரும் உங்கள் கைகளை உயர்த்தி "தேவனே நான் அதை வாக்களிக்கிறேன்" என்று கூறுங்கள்.

100. இப்பொழுது நாம் ஜெபிப்போம். எங்கள் பரலோக பிதாவே, இந்த பிற்பகலில் இந்த ஜனங்கள் ஒரு நீதிமன்றம் போல நடத்தப்பட்டிருக்கிறார்கள். கர்த்தாவே, நீர் ஒரு உண்மையான விசாரணையை கொண்டிருந்தீர் என்று நான் உணர்கிறேன். பிலாத்து உமக்கு நியாயமான விசாரணையை கொடுக்கவில்லை, அவன் பொய்யான சாட்சிகளை பெற்றிருந்தான். ஆனால் நீர் பொய் சாட்சிகளை முறியடித் தீர். பிரதிவாதி சாட்சியாக பரிசுத்த ஆவியானவர்

ஜனங்களுக்கு முன்பாக வார்த்தையை உறுதிப்படுத்த வந்தார், நீர் ஒரு நியாயமான விசாரணையை கொண்டி ருந்தீர். மேலும் ஜனங்கள் தங்கள் மனதில் முடிவு செய்து விட்டார்கள், அவர்கள் தங்கள் தீர்ப்பை கூறி விட்டார்கள், அவர்கள் கூறுகிறார்கள், மேலும் அவர்கள் உம்முடைய வார்த்தை சரியாக இருக்கிறது, ஆனால் அது தவறாக புரிந்து கொள்ளப்பட்டது என்பதை இந்த உலகத்துக்கு நிரூபிக்க வந்து கொண்டிருக்கிறார்கள்? சிலர், "நீங்கள் இதைச் செய்கிறதை நான் காணட்டும், நீங்கள் அதைச் செய்கிறதை நான் காணட்டும்" என்று சொல்கிறார்கள். அது உம்முடைய வார்த்தையின்படி இல்லை. "அவர்கள் சொஸ்தமாவார்கள்" என்று தான் வார்த்தை சொன்னது. மேலும் நீர் அப்படித்தான் கூறினீர் என்பதை நிரூபிக்கும் படியாக நாங்கள் மேடைக்கு சாட்சிகளை கொண்டு வந்திருக்கிறோம். நீர் உம்முடைய சொந்த வழியில் காரியங்களை செய்கிறீர்.

101. இப்போது, பிதாவே, இந்த பிற்பகலில் ஜனங்களுக்கு இந்த ஆசிர்வாதங்களை நீர் வழங்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். உம்முடைய ஊழியக்காரனாக, மேலும் உம்முடைய மற்ற எல்லா ஊழியக்காரர்களுடனும் சேர்ந்து இங்கே இவர்களில் நூற்றுக்கணக்கானோர் இந்த ஜனங்களுக்காக எங்கள் ஜெபத்தை ஏறெடுக்கிறோம். கர்த்தாவே, இந்த அருமை யான போதகர்களை அபிஷேகியும். எல்லாக் காலங் களிலும் அந்த விமர்சகர்கள், சந்தேகவாதி, அல்லது அவிசுவாசி அல்லது திரு. பொறுமையற்றவர் அல்லது அந்த விமர்சகர்களில் யாரேனும், எப்போதாவது இந்த ஜனங்களிடம் வந்தால் அவர்களுக்கு எதிராக இந்த பிற்பகலில் இந்த நீதிமன்றம் இவர்களுடைய சாட்சியை ஒலிக்கட்டும். நோவாவுக்கு அது "நோவாவின் நாட்களில் நடந்தது போல, சோதோமின் நாட்களிலும் நடக்கும்." இரண்டும் அழிவுக்குள் சென்றது. அவர்கள் எப்படி

பரிகாசம் செய்தார்கள், எப்படி கேலி செய்தார்கள், ஆனால் அது எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தவில்லை. விசு வாசிகள் வார்த்தையை உறுதியாக பிடித்துக் கொண்டார்கள். மேலும் நாங்கள் இந்த பிற்பகலில் பிதாவே, வார்த்தையை பிடித்துக்கொள்ள தயாராக இருக்கிறோம். இந்த ஜனங்கள் மேல் கைகளை வைக்கத்தக்கதாக நான் இங்கே உம்மு டைய மற்ற போதகர்களுடன் என்னையும் இணைத்துக் கொள்கிறேன். இப்போது பிரசன்னமாகி வார்த்தையை நிரூபித்துக் கொண்டிருக்கிறார் என்று நாங்கள் அறிந்திருக் கிற சர்வ வல்லமையுள்ள தேவன் தம்முடைய வல்லமை யினால் இவர்கள் ஒவ்வொருவரையும் சுகமாக்கு வாராக. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம். ஆமென்.

102. சகோதரன் ராய், நீர் இந்த மேடைக்கு வருகிறீரா? எல்லா தலைகளும் தாழ்த்தி இருக்கட்டும். ஒவ்வொருவரும் ஜெபித்துக் கொண்டும் பாடிக்கொண்டும் இருங்கள். நீங்கள் ஜெபிக்கவில்லை என்றால், "நம்பிடுவாய்" என்ற பாடலை பாடுங்கள். நீங்கள் இந்த ஜெப வரிசையில் கடந்து வரும் பொழுது, விசுவாசியுங்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள் அல்லது செய்கிறீர்கள் என்பதைக் குறித்து காரியமில்லை. அது உங்களைப் பொறுத்தது. நீங்கள் கூச்சலிட விரும்பி னால் கூச்சலிடுங்கள், மேலும் நீங்கள் நடந்து செல்ல விரும்பினால் நடந்து செல்லுங்கள். அது என்னவாயிருந் தாலும் காரியமில்லை. தேவனை விசுவாசியுங்கள். நீங்கள் நடந்து சென்று "அது என் இருதயத்தில் பதிந்து விட்டது" என்று சொல்லுங்கள். நீங்கள் ஞானஸ்நான தொட்டியண்டை சென்றபோது செய்தது போல, நீங்கள் அதை விசுவாசித் தால் அது அதை முடித்து வைக்கிறது. நீங்கள் விசுவாசிக் கிற வரைக்கும் நீங்கள் ஒரு கிறிஸ்தவராய் இருக்கிறீர்கள். அது சரிதானே? மேலும், நீங்கள் விசுவாசிக்கிற வரைக்கும் நீங்கள் சுகமடைவீர்கள். நாம் எல்லோரும் இப்பொழுது ஜெபிப்போம். நல்லது, சகோதரன் பார்டர்ஸ். [சகோதரன்

பிரான்ஹாம் வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கிறார். ஒலிநாடாவில் காலியிடம் - ஆசி]

... நம்பிடுவாய்.

நாம் சந்திக்கும் வரை! நாம் சந்திக்கும் வரை!

இயேசுவின் பாதத்தில் நாம் சந்திக்கும் வரை;

நாம் சந்திக்கும் வரை! நாம் சந்திக்கும் வரை!

நாம் மீண்டும் சந்திக்கும் வரை!

தேவன் உங்களோடு இருப்பாராக!

103. நான் தேவனுடைய வார்த்தையை உங்களுக்குப் பிரசங்கித்தேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், நீங்கள் ஒவ்வொருவரும் எதைக் கேட்டீர்களோ அதைப் பெற்றுக் கொள்வீர்களாக. "நீங்கள் இந்த மலையைப் பார்த்து, பெயர்ந்து போ என்று சொல்லி உங்கள் இருதயத்தில் சந்தேகப்படாமல், ஆனால் நீங்கள் சொன்னது நிறைவேறும் என்று விசுவாசித்தால், நீங்கள் சொன்னதை நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள்" நீங்கள் ஜெபிக்கும் பொழுது, நீங்கள் கேட்கிறதை பெற்றுக்கொள்வீர்கள் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது, அது உங்களுக்கு அருளப்படும். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நான் உங்களுக்குப் பிரசங்கித்தேன். நம்முடைய தீர்ப்பின் விவரம் எழுதப்பட்டு விட்டது என்றும், அது நிறைவேற்றப்பட்டு நம்முடைய கிரியைகள் நாம் அவரை விசுவாசிக்கிறோம் என்பதை நிரூபிக்கிறது என்றும் நான் நம்புகிறேன். மேலும் அவர் நம்மை சுகமாக்கிவிட்டார் என்று நாம் அறிந்திருக்கிறோம். நதிக்கு இக்கரையில் நான் மீண்டும் உங்களை சந்திக்காவிட்டால், அக்கரையில் உங்களை சந்திப்பேன். அப்பொழுது, இந்த வாரத்தில் நம் மத்தியில் விருந்தினராக வந்திருந்து நமக்குப் பிரசங்கம் செய்த பரிசுத்த ஆவியானவர், நான் உங்களுக்கு

சத்தியத்தை மாத்திரமே சொன்னேன் என்று உங்களுக்கு சாட்சி கொடுப்பார். அதுவரைக்கும்:

நாம் சந்திக்கும் வரை! நாம் சந்திக்கும் வரை!

நாம் மீண்டும் சந்திக்கும் வரை!

தேவன் உங்களோடு இருப்பாராக!

இப்பொழுது, நாம் நம்முடைய தலைகளை தாழ்த்துவோம்.

104. மிகவும் அமைதியாகவும் இனிமையாகவும். [சகோதரன் பிரான்ஹாம், "நாம் சந்திக்கும் வரை" என்கிற பாடலை முணுமுணுக்கிறார் - ஆசி.]

105. மரண அலைகள் உங்கள் முன் புரண்டு வரலாம். பரலோகத்தின் தேவன் தாமே அவருடைய பிரசன்னத்தில் இருக்கிற நம்மை நாம் மீண்டும் சந்திக்கும் வரை என்றென்றைக்கும் காப்பாராக.

சகோதரனே, தேவன் உம்மை ஆசீர்வதிப்பாராக. நான் உம்மை பாராட்டுகிறேன்.

இந்த புத்தகம் ஈரோடு, திருப்பூர், ஸ்ரீவல்லிபுதூர், மற்றும் திருநெல்வேலி, நடந்தை சபையார் கொடுத்த காணிக்கையால் அச்சிடப்படுகிறது.

சகோ. நடந்தை ஜெயராஜ் - ☎ 9865704479

<u>எமது வெளியீடுகள்:</u>

1. ஜீவன் 58–0519
2. பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை... 53–0614
3. தேவனால் அருளப்பட்ட சுகமளித்தலின் வழி 54–0719
4. குருடன் பர்திமேயு 61–0124
5. தேவன் தம்முடைய சிந்தையை... 65–0427
6. ஆவிக்குரிய புத்திரசுவிகாரம் 56–0923
7. உம்முடைய வார்த்தையின்படியே 53–0608E
8. யேகோவாவின் ஏழு கூட்டு நாமங்கள் 55–0120
9. முன்மாரியும் பின்மாரியும் 60–0303
10. அவர் அந்த வழியாக கடந்துபோக... 57–0727
11. யோசேப்பு தன் சகோதரர்களை சந்தித்தல் 56–1230
12. ஒரு வில்லிலிருந்து எய்யப்பட்ட தேவனுடைய... 56–0801
13. மன்னிக்க முடியாத பாவம் 54–1024
14. ஒரு முற்றிலுமானது 63–1201M

15. தேவசித்தம் இல்லாமல் தேவனுக்காக ஒரு சேவை செய்ய முயற்சித்தல் 65–11–27B
16. வெளியே அழைக்கப்பட்டவர்கள் 58–01–09
17. மகத்தான இளவரசனும், ராஜாவுமாகிய மெல்கிசேதேக்கு 55–0109 M
18. இயேசு யார்? 64–0620M
19. ஒரு விளங்காத சத்தம் 61-03-15
20. வழக்கு விசாரணை 64–04–19
21. உன்னதஅழைப்பு (HINDI)
22. ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு (மறுபதிப்பு)
23. ஏழு சபை காலங்களின் வியாக்கியானம் (மறுபதிப்பு)
24. இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல் (மறுபதிப்பு)
25. தானியேலின் எழுபது வாரங்கள் (மறுபதிப்பு)
26. சுகமாகுதலைக் குறித்த சிந்தனைகள் (மறுபதிப்பு)

அடுத்த வெளியீடுகள்:

1. உலகம் மீண்டும் விழுந்துபோகுதல் 63–1127
2. இயற்கைக்கு மேம்பட்டவைகள்: வில்லியம் பிரன்ஹாமின் வாழ்க்கை வரலாறு, பாகம்- 1
3. ஒரு தீர்க்கதரிசியின் தென்ஆப்பிரிக்கப் பயணம்
4. அழுத்தத்தை வெளியேற்றுதல் 63–0113M
5. எல்–ஷடாய் 59–04–16
6. கிறிஸ்து கதவைத் தட்டுகிறார் 58–03–30E
7. கேள்விப்படுதல், பெற்றுக்கொள்ளுதல் மற்றும் செயல்படுதல் 60–0607

8. தெய்வீக ஐக்கியத்திற்கான தேவனுடைய அருளப்பட்ட அணுகுமுறை 60-06-30

இலவசப் பிரதிகளுக்கு:

சகோ. பெனியேல் எபி (கோவை)

போன்: +91 9047268278, 9597378278

website: www.wordoflife.in

Visit The Website

Download PDF

குறிப்புகள்: